www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் - 28

# Chanchive

1994




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1994

# சஞ்சீவி

மே - ஆகஸ்ட்.

மலர் - 28

அட்டைப்படம்- விளக்கம்:
தொலைக்கப்பட்ட காலங்களின்
பதிவுகளும், தடயங்களும்.

**பக்கம்:** **உள்ளடக்கம்:**


| பக்கம் | உள்ளடக்கம் |
|---|---|
| 3. | நோக்கு |
| 5. | யார் இந்த சபாலிங்கம் |
| 6. | பத்து வருட போராளி. |
| 10. | கவிதை (யாதும் ஒன்றே) |
| 11. | பேட்டி. |
| 16. | கவிதை (சம்மதங்கள்) |
| 17. | பல்லக்கு தூக்குவது தமிழரின் வேலையா? |
| 22. | கவிதை (தென்னவர்) |
| 23. | மனவருத்தங்கள் |
| 25. | கட்டிக் காப்போம் வாரீர்! |
| 28. | கவிதை (அறியும் வரை) |
| 30. | சிறுகதை: |
| 38. | கம்யூனிசத்துக்கு...... |
| 43. | கவிதை (தொலைந்து போனது) |
| 44. | குறுக்கெழுத்துப்போட்டி. |
| 46. | நாஜி எதிர்ப்பு ஊர்வலம். |
| 47. | பழையன கழிதல் காலத்தின் விதி. |
| 51. | கடிதங்கள். |


தொடர்புகளுக்கு :

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holsterbro
Denmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சபாலிங்கம் என்ற மனிதன் மரணிக்கப்பட்டான். 2000ம் ஆண்டிலும்
ஒடுக்குமுறையால் உறைந்துகிடக்கும் எம்மண்ணின் விடிவுக்காகவும், பல எழு-
த்தாளர்களின் ஜனநாயக மறுப்புச்செய்யப்பட்ட கருத்துக்களை, சிந்தனை-
களை ஆசியா நிறுவனத்தின்மூலம் முன்வந்து மக்களின் ஜனநாயக உரிமைக-
ளை மதிக்கின்ற மேற்கத்தைய மண்ணில் வெளியீடுசெய்தும், என்னும் எமது
மண்ணுள் மறைந்துகிடக்கும் உண்மைகளை ஆதாரங்களுடன் வெளிக்கொண்டு-
வரும் இறுதிநேரத்தில் நரபலியெடுக்கும் அராஜகவாதிகளினால் அவனது
உயிர் பறித்தெடுக்கப்பட்டது.

எந்தவொரு உயிரினமும் காலவரையறையின்றி உயிர் வாழ்ந்ததாக
வரலாறு இதுவரையில்லை. பிறப்பு இறப்பில் முடிந்தாலும் இடைப்பட்டகா-
லத்துள் தான் வாழ்ந்த சமூகத்திற்கு சபாலிங்கம் விட்டுச்சென்ற வரலா-
ற்றுத்தடயமே முக்கியமாகின்றது.

மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளே மறுக்கப்பட்டு அவ-
ற்றை மீட்டுக்கொள்ள முனையும் எந்தவொரு கணத்துக்காகவும் காத்திரு-
க்கும் மனிதர்களின் சிந்தனைகளைப்பறிப்பதன்மூலம் எங்கள் மண்ணின் மீட்சி-
யானது தூரத்தே தொலைந்துபோனது. ஒடுக்கங்களுள் புதைந்துபோன
நிலையில் ஐரோப்பிய மண்ணில் சுகபோக வாழ்க்கை தேடியிருந்தால்
இவனுக்கு இந்நிலை மாற்றப்பட்டிருக்கலாம், அற்று அவன் தான் கொண்ட
கொள்கையின்பால் விடிவு தேடியவன். அவை எமக்கு ஏற்கமுடியாதவையா-
கக்கூட இருக்கலாம். அது அவனது உரிமை. அவன் தன் உரிமையின்பால்
குடும்பத்துக்காக மட்டும் உழைக்கவில்லை, தான் வாழ்ந்த சமூகத்திற்காய்,
தான்பிறந்த மண்ணிற்காய், மேலாக தன் வாயால் முதன்முறையாய் ஊற் -
றெடுத்த தமிழுக்காய் ஏதேதோ செய்ய முயலவில்லை, மாறாக எங்கே-
யோ கொண்டுசென்று ஒழித்துவைக்கப்பட்ட எங்கள் உரிமைகளில் ஒன்றான
வரலாற்றைத்தேடியவன். ஆணிவேரறுக்கப்பட்ட மனிதர்களின் பக்கவேர்
பிடித்து எங்கள் எதிர்காலமுதிர்வுக்கு எழுத்தூட்டி தன்னை மக்களுள் புதை-
த்துக்கொண்டவன்.

தமிழ், தமிழென்று உயிர்வாழ்வோர், தமிழைச்சொல்லி பிழைத்துக்-
கொள்வோர், அகில உலகத்தமிழென்போர் இவர்களெல்லாம் எங்கே
போயினர். இந்தச்சபாலிங்கம் மட்டுமல்ல, என்றும் எத்தனையோ மனிதங்-
கள் பறிக்கப்பட்டபோதும், இவர்கள் அகில உலகத்தமிழ் என்று பிழைப்பு
தேடி அலைந்தவர்கள். ஓர் ஈழத்தமிழன் இறந்துகிடக்கிறான்! இவனை உங்-
கள் கண்கள் காணவில்லையா? எப்போதும் எங்களினம் பெரிதாகக்காட்-
டிக்கொள்வதில் மட்டும் பெருமையடித்துக்கொள்ளட்டும்.

www.tamilarangam.net

ஈழப்போராட்ட அலை எழுந்தகாலமுதல் ஆதிக்க இராணுவங்களின் கொலைவெறி, அழிப்புகளையும்விட பலபடிகள் முன்னேறி எம்மினத்தையும், எங்கள் பொக்கிசங்களையும், எங்கள் போராளிகளே சதிசெய்தும், கொலைசெய்தும், எரித்தும் நாசமாக்கியுமுள்ளனர்.

எம்மினத்திலுள் கருத்து முதன்மைகொண்டு செயற்பட்ட இவர்களின் சிந்தனைகளும், கருத்துகளும், இவர்களின் வாழ்வும் எம்மண்ணின் விடிவுக்காக வித்தானவை. இவர்களை எம்போராளிகளே கொன்றுதொலைத்தனர் இவர்கள் எமது விடுதலைப்போராட்டத்தை காட்டிக்கொடுக்க முனைந்தவர்களல்ல. இப்படியான சிந்தனைகளற்ற கொலைகள் நீண்டுபோனதாலேயும், மாற்றுக்கருத்துக்களுக்கு முகங்கொடுக்க மறுப்பதாலும் இன்றுவரையான எங்கள் விடுதலைப்போராட்டமானது பின்னடைவை நோக்கியுள்ளது.

விடுதலைக்கான புதிய அரசியல், பண்பாடுகள், கலைகளை விதைத்து சர்வதேசக்கண்ணோட்டத்தை ஈர்க்கவேண்டியதை மறந்து, இப்படிப்பட்ட உயிர்ப்பறிப்புகள் ஈழத்தையும்விட்டு முன்னேறி ஐரோப்பாவிற்குள்ளும் புகுந்ததென்பது கொலைஞர்களின் எதிர்கால வளிகாட்டலை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சர்வதேசத்திற்கும் காட்டிநிற்கின்றதுடன், ஈழத்தமிழரென்றால் அவர்கள் சர்வதேச பயங்கரவாதிகள் என்ற முத்திரையினையும் பதித்துள்ளது.

இப்படியான கொலைகள் தொடர்ந்துகொண்டு போவதனாலும், தொடர்ந்தும் மக்கள் மௌனிகளாக இருப்பதனாலும் திக்கற்ற இன்றைய எமது ஈழவிடுதலைப்போராட்டமானது நிச்சயமாக ஒரு குருட்டுச்சந்துக்கே இட்டுச்செல்லும்.

– சஞ்சீவி.

---


## புகழேந்தி ஓவியங்கள்

# எரியும் வண்ணங்கள்

வன்முறைக்கெதிராக
சில ஓவியங்கள்

நன்கொடையாகவோ, வெளியீட்டுத்திட்டத்துக்குரிய
முன்பணமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி

தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48 இராணி அண்ணா நகர்,
கே.கே.நகர், சென்னை-78, இந்தியா.

முன் வெளியீட்டுத் திட்ட
விலை ரூ. 50-00




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சபாரட்ணம் சபாலிங்கம்



# யார் இந்த சபாலிங்கம்?

*1970 களில் விடுதலைக்காக போராட்டத்தில் இறங்கிய தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சிறீலங்கா அரசு கைதுசெய்த வேளையில் சபாலிங்கம் பாலம் ஒன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிடப்பட்டார். மாடிச் சிறையிலிருந்து தப்பியோடும் போது நாரியில் முறிவேற்பட்டு 5 வருடங்கள் சிறீலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்கு தலைமறைவாக வாழ்ந்த அவர், அதன்பின் பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.*

*புலம் பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்து வந்த சபாலிங்கம் மனித நேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும், ஈழத்து கலை இலக்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார்.* ASSEAY *(ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம்) எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராக இருந்து, சமகால கவிஞர்களான வ.ஐ.ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளையும், தாரகி அவர்களின்* "Eluding Peace" *ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் 'புத்தளம் முஸ்லிம் மக்கள் வரலாறு' , இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் 'புதியதோர் உலகம்', இலங்கையில் தடைசெய்யப்பட்ட 1958 கலவரத்தைப் பற்றிய தாச்சிவித்தாச்சி அவர்களின்* 'Emergency 58', *மற்றும் 'யாழ்ப்பாண வைபவ மாலை' போன்ற நூல்கள் மீண்டும் வடிவம்பெற உழைத்திருக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக் கொண்டார்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பத்து வருடப் போராளி...

## -மொஸாம்பிக்-

*மொஸாம்பிக் நாட்டிலுள்ள "RENAMO" என்ற கொறில்லா
இயக்கத்திலுள்ள குழந்தைப் போராளிகள் கற்றுக் கொ-
ண்டதெல்லாம் (8-10 வயது) கொலையும், களவும்
தீ வைப்புமேயாகும். குழந்தைப் பருவத்திலுள்ள ஆயி-
ரக் கணக்கான போராளிகள் இதனால் மிகவும்
பாதிக்கப் பட்டுள்ளனர். *

அவனொரு இளைஞன் வயசோ 19-20 இருக்கும். ஆனால் சரி-
யான வயதுபற்றி எவருக்கும் தெரியாது. அவனது பெயர் மொசா
என்பது மட்டும் தெரியும். தந்தைபெயர் தெரியாது. ஆனால் அவன்
தன்னை மொசா மொமட் எனச்சொல்வான்.

அவனது குடும்ப விபரம்பற்றி போராளிகள் வதியும் முகாமில்
உள்ளவர்கள் அவனுக்குச்சொன்னதெல்லாம் நீ மொஸாம்பிக்கின் வட-
பகுதியான நியாஸாப்றொவிஸனிலிருந்து வந்தாய் என்பது மட்டுமே.

மொசா 8-9 வயதாக இருக்கும்போதே 'றெனாமோ' என்ற
இயக்கத்தினால் கடத்தப்பட்டு, இயக்க நடவடிக்கைகளை பயிற்றப்ப-
ட்டான். இவன் பயின்றுகொண்டதெல்லாம் கிராம அழிப்பு, தீ வைப்பு,
கொலைகள், கொள்ளை என்பவையாகும். தன்னால் எத்தனை மனிதர்-
கள் கொல்லப்பட்டனர் என்பது தெரியாத அளவுக்கு கொலைகள்
செய்துள்ளான்.

அவனுக்கு இப்போது 19-20 வயதிருக்கும். அவன் கூறும்போது:
தமது கைகளில் துப்பாக்கி இருக்கும்போதெல்லாம் எந்தவித இலக்-
குமின்றி எடுத்ததற்கெல்லாம் மனிதர்களை சுட்டுக்கொன்றுள்ளோம்.
சில வேளைகளில் எனக்குப்புரிவதில்லை, ஏன் நாம் மனிதர்களை
கொல்கின்றோம்! மேலிட உத்தரவுகளை நாம் மீறினால், சுடாது-
விட்டால் எமக்கு மரணதண்டனை. நான் எனக்கு மேலுள்ளோருக்குப்ப-
யப்படுகின்றேன், எனக்குக்கீழுள்ளோர் என்னைப்பார்த்துப்பயப்படுகின்ற-
னர். எல்லோருமே எல்லோருக்கும் பயந்துகொண்டு வாழ்கின்றோம்.

www.tamilarangam.net

மொசா 10-12 வயதாயிருக்கும்போதே ஒரு குழுவிற்கு தலைவனாக நியமிக்கப்பட்டான். அவனுக்கு ஒரு பெண்ணும் கொடுக்கப்பட்டிருந்தாள். இது அவனது விருப்பற்றதாயிருந்தும், மீறி எந்த ஒரு விருப்பத்தினையும், கோரிக்கைகளையும் தெரிவிக்கமுடியாது. போராளிகள் 10-12 வயதாகும்போது, இவர்களால் கைதுசெய்யப்படும் வயதுப்பெண்களுடன் உடலுறவுகொள்ளும்படி பணிக்கப்படுகின்றார்கள். மொசா பலதடவை இந்த இயக்கத்தைவிட்டு வெளியேற முயற்சித்தும், சிந்தித்தும் அங்கிருந்து வெளியேறிய ஏனைய குழந்தைப்போராளிகளுக்கு கண்கள் பிடுங்கப்பட்டும், சித்திரவதைகள் செய்யப்பட்டு கொலைகள் செய்யப்பட்டதனையும் எண்ணிப்பயந்து தனது தப்பும் முயற்சியை கைவிட்டுள்ளான்.




இந்த இயக்கத்துக்கும், அரசுக்குமிடையில் ஏற்பட்ட இணக்கஒப்பந்தத்தின்பின் (ஒக்டோபர் 1992) முகாமைவிட்டு வெளியேறுவதற்கான உரிமை மொசாவுக்குக்கிடைத்தது.

அவன் அந்த ஊர்ச்சமுகநிர்வாகிகளுடன் தொடர்புகொண்டதும், அங்குள்ள குழந்தைகள் பராமரிக்கும் நிறுவனத்தில் வசிப்பதற்கான உரிமை கிடைத்தது. இப்போது அவன் அங்குதான் காலத்தை போக்கிக்கொண்டிருக்கிறான். அவனது சிந்தனையெல்லாம் தனது குடும்பத்தினை தேடுவதென்பதுதான்.

இந்த 16 வருடப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பெற்றோரையும், குடும்பத்தினையும் இழந்துவிட்டார்கள். இவர்களே இந்த இயக்கத்தின் கொள்ளை, கொலை, சித்திரவதைகளுக்கு சாட்சியமானவர்கள். இவர்களில் எத்தனையோ குழந்தைகள் தமது கண்கள்,

www.tamilarangam.net

கைகள், என பலவகைப்பட்ட அங்கங்களையிழந்து காணப்படுகின்றார்கள். சுமார் ஒரு இலட்சம் குழந்தைகள் இப்படிப்பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இவர்களது குழந்தைப்பராயம், கல்வி, சிந்திக்கும்திறன் உலக அறிவு என்பவற்றையெல்லாம் இந்த இரத்தப்போரினால் மறக்கடிக்கப்பட்டது. இதனால் அவர்களுக்குத்தெரிந்ததெல்லாம் அழிப்புகள்தான்.

ஆயிரக்கணக்கான போராளிக்குழந்தைகளின் அறிக்கைமூலம், இவர்களின் கடந்தகாலம்பற்றியும், வாழ்வுபற்றியும் அறியமுடிகிறது. இவர்கள் குழந்தைகளாக இருக்கும்போதே கற்றுக்கொண்டதெல்லாம் தாக்குதல் கொலைகள் என்பதனால் குழந்தைகள் பராபரிக்கும் நிலையத்திலும் இவர்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்கின்றனர். இந்த விடயத்தினை ஒரு கனடிய எழுத்தாளரும், குழந்தைகள் பராபரிப்புத்தலைவருமான LENA - MAGAIA கூறும்போது:

தெருக்குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட நிலையத்தில் 60 குழந்தைகளுக்கான உணவு வழங்கும் திட்டமே உள்ளது, இடப்பற்றாக்குறை காரணமாக இங்கு உணவுமட்டும் வழங்கப்படுகின்றது. இந்த நிறுவனத்துக்கு டெனிஷ் உதவி ஸ்தாபனங்களிலொன்றான 'IBIS' அங்குள்ள குழந்தைகளின் கல்வி, கைத்தொழில் மேம்பாட்டுத்திட்டத்திற்காக பாடசாலை அமைப்பதற்கு 1990ல் உதவி வழங்கியுள்ளது.

இந்நிறுவனத்திற்கு தினமும் சிறுவர்கள் உணவுக்ககாக வருவது வழக்கம்.

********

மொசா தனது இளைய இருசகோதரிகளுடனும், பெற்றோருடனும் சந்தோசமாக வசித்துவந்தான். கடைசிச்சகோதரியின் வயது இரண்டு மாதங்கள் மட்டுமேயாகும். 1988 ம் ஆண்டு ஓர்நாள் அதிகாலைவேளை றெனாமோ இயக்கத்தினர் அந்தக்கிராமத்தைச் சுற்றிவளைத்தார்கள். இவனது வீட்டுக்கும் வந்தார்கள்.

இயக்கத்தினர் தமது முகாமுக்கு அவனது குடும்பத்தினரை கடத்தி செல்ல முயன்றபோது அவனது தந்தை மறுத்துப்போராடினார். தந்தையை கண்முன்னால் ஓலைவீட்டினுள்ப்போட்டு தீமூட்டிஎரித்தனர். அதன்பின்பு அவனது சகோதரிகளை தூக்கிமரத்துடன் அடித்துக்கொன்றனர். அவனையும், தாயையும் அந்தக்கிராமத்தின் வளர்ந்த குழந்தைகளுட்பட யாவரையும் பிடித்து தமது முகாமுக்கு கொண்டுசென்றனர். அவனை தமது போராட்டத்திற்காக பாவித்தனர். அவனுக்கு பயிற்சிகொடுத்து துப்பாக்கியும் வழங்கினர். அவனை தென்னாபிரிக்காவிலிருந்து உணவு ஏற்றிவரும் வாகனங்களைத்தாக்கி பொருட்களினை கொள்ளையிடப்பாவித்தனர், பின்னர் கிராமங்களை அழிப்பதற்கும் பாவிக்கப்பட்டான். இவனுக்கு எவரும் சொன்னதில்லை "நாம் ஏன், எதற்காக அழிக்கின்றோம்" என.

முகாமில் வசிக்கும் குழந்தைப்போராளிகளுக்கு ஒருபோதும் உணவு வழங்கப்படுவதில்லை. அவர்களுக்குத்தேவையான உணவுகளை, உணவு ஏற்றி வரும் வாகனங்களை அல்லது கிராமங்களைக்கொள்ளையடித்து வயிறுநிரப்பிக்கொள்வர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் அவன் கூறுகின்றான்: நாங்கள் தாக்குதலுக்கு போவதற்கு தயாராகும்போது எமக்கு ஒருவகையான குடிவகை தரப்படும் அல்லது மாத்திரை தரப்படும். இதனை நாங்கள் குடித்ததும் அடுத்தகணம் எமக்கு எதுவித பயமுமின்றி தாக்குதல், கொள்ளை, கொலை எதனையும் துணிந்து செய்துகொள்வோம்.

அவன் இந்த முகாமுக்கு வந்து 5வருடங்களாகின்றன, முகாமுக்கு வந்ததுமே அவனது தாயின் தொடர்பும் இல்லாது போய்விட்டது. தனது தாய் உயிருடன் இருக்கின்றாளா என்பதுபற்றி அவனுக்கு எதுவுமே தெரியாதுள்ளது. அவன் போராட்டத்தின் இறுதிக்காலத்தின்போது இந்த முகாமைவிட்டு வெளியேறினான். எப்போதென்ற சரியான விபரம் தெரியாதுள்ளான், இவன் இந்த குழந்தைகள் பராமரிப்பு நிலையத்துக்கு வந்து









1975 Samora Machel leads leftist government after independence from Portugal
1981 South Africa-supported Renamo intensify attacks
1986 Chissano succeeds Machel as President
1990 Peace talks start
1991 Political parties legalised
1992 Peace accord with Renamo
1994 First multi-party election due in October

எல்லோரையும் கத்திகாட்டி வெருட்டியவாறு சில மாதங்கள் உலாவந்தான். எந்நேரமும் சண்டைக்கோலத்துடனேயே காட்சியளிப்பான். இப்போது சாந்தகுணத்துடன் எல்லோருடனும் பழகியவாறு சந்தோசமாக உள்ளான். ஆனாலும் ஏனைய குழந்தைகளை தனது அடிமைகளாக, வேலைக்காரர்களாக பாவித்துவருகின்றான்.

இவன் எப்போது சாதாரணஅறிவுடைய மனிதனாக வருவான். ? என்பது கேள்விக்குரிய விடையமாகவே உள்ளது.

தற்போது இந்த 'றெனாமோ' இயக்கமானது பலகுழந்தைகளை தமது தடுப்புக்காவலில் வைத்துள்ளது. காரணம் அந்தக்குழந்தைகள் வெளியில் வந்தால் இயக்கம்பற்றிய கூடிய விபரங்களை, உண்மைகளை வெளிஉலகிற்கு வெளியிட்டுவிடுவார்கள் என்ற பயமாகும். இந்நிலையில் இந்தக்குழந்தைகளை இந்தச்சமுதாயத்தில் எப்படி இணைப்பது?

யார் இதனை முன்வந்துசெய்வது??

நன்றி: SAMVIRKE - OKT 1993.
தமிழில்: சி. கருணாகரன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாதும் ஒன்றே...

மாற்று மதத்தை ஏற்காதே!
தேவா உன்
முதற் கட்டளை

"வர்ணம் கலப்பின்
உலகம் அழியும்"
பகவானின் கீதோபதேசம்

புத்தத்தை
சமணத்தை
இஸ்லாமை
ஒழியுங்கள் கீதை வாழ...

அல்லாவின் பெயரால்
போர் தொடுப்போம்
ஓடட்டும் ரத்தம்...

"யூதர்களைத் தண்டிப்போம்"
தேவனின் துரோகிகள்

நான்கு திக்கிலும்
மனித ஓலங்கள்.

சும்மாவா சொன்னார்கள்?
எல்லா மதமும்
ஒன்றையே
சொல்கிறதென்று.

T. சௌந்தர்

www.tamilarangam.net



# பேட்டி

சென்ற இதழ் தொடர்ச்சி!

## உடுப்பு

குழந்தைகளுக்கு கம்பளியிலான உடைகளை அணிவதே மிகமிகச் சிறந்ததாகும். ஏனென்றால் அதுதான் உடல் வெப்பநிலையை எப்போதும் சீராக வைத்திருக்கும். குளிர்காலங்களில் உடலின் வெப்பநிலை குறைகின்ற போதே தடிமன், தொண்டை வருத்தங்கள் ஏற்படுகின்றது. ஆட்டுத் தோலினால் செய்யப்பட்ட ஒரு படுக்கை விரிப்பை இங்கு பொதுவாக எல்லோரும் பாவிப்பது வழக்கம். குழந்தையை வீட்டில் படுத்தும் போதும் வெளியில் வண்டிலில் கொண்டு போகும் போதும் இதைப் பாவிக்கலாம். இது குழந்தைகளுக்கு நல்ல வெப்பத்தைக் கொடுக்கும்.

கதவினை அடிக்கடி திறந்து மூடுவதால் குளிரானது உள்ளே புகுந்து நிலத்தில் படிந்து விடும். வீட்டிலே மற்ற இடங்களை விட நிலமானதே அதிகமாக குளிருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கலாம். இந்தக் கால கட்டங்களில் பெரியோர்களை விட குழந்தைகளுக்கே அதிக உடுப்புக்களைப் போட்டு விட வேண்டும். குழந்தைகள் தங்களுக்கு குளிர்வதை மூன்று வயதின் பின்னர் தான் சொல்லத் தொடங்குவார்கள். குழந்தைகளின் பாதங்கள் குளிர விடாமல் பாதுகாக்க வேண்டும். பாதங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குளிர்பிடிக்கும் வேளையில் உடலில் வருத்தங்கள் தோன்ற ஆரம்பமாகும். இங்கே காலுக்கு சொக்ஸ் போட வேண்டும் என்ற கட்டாயம் இருக்கின்றது. இந்த வேளையில் குழந்தைகளுக்கு சொக்ஸ் போடுவது, சப்பாத்துப் போடுவது விருப்பம் இல்லாமல் இருக்கும், அடிக்கடி கழற்றி எறிவார்கள். ஆனால் நாங்கள் தான் அவர்களுக்கு அந்தப் பழக்கத்தை கட்டாயப்படுத்தி பழக்கிக் கொள்ள வேண்டும்.

நாங்கள் இங்கே வெளிநாட்டவர்களின் குழந்தைகளைப் பார்வையிடுகின்ற போது டெனிஸ் குழந்தைகளை விட வெளிநாட்டுக் குழந்தைகளின் பாதம் குளிராக இருப்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. ஏன் என்றால் பெரும்பாலான அகதிகள், வெளிநாட்டவர்கள் வெப்பநாட்டிலிருந்து தான் வந்திருக்கின்றார்கள். இங்கே குளிர்காலத்தில் வீட்டுக்குள்ளேயும் சொக்ஸ் போட வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து வருகின்றோம்.

குளிர்காலத்தில் குழந்தைகளின் தோல், கன்னம், சொண்டு எப்போதும் காய்ந்து இழுக்கமாய் இருக்கும். குழந்தைகளை வெளியில் கொண்டு போது முகத்துக்கு கட்டாயமாக கிறீம் போட்டுக் கொண்டு போக வேண்டும். இங்கே குழந்தைகளுக்கென பலவகையான கிறீம் வகைகள் உண்டு. குளித்தவுடனும் கிறீம் போட வேண்டும். அதுவும் வாசனைகள் இல்லா கிறீம் தான் பாவிக்க வேண்டும். ஏன் என்றால் சில வாசனைகள் மேலும் அலேர்ஜி ஏற்படலாம். வாசனைகள் பாவிப்பது கூட கலாச்சாரத்துக் கலாச்சாரம் வேறுபடலாம்.

## போச்சிப் போத்தல்.

போச்சியில் பால் குடிக்கும் குழந்தைக்கு 12 மாதத்திலிருந்து 18 மாதத்திற்குள் அந்தப் பழக்கத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்படி நிறுத்திக் கொள்வதால் குழந்தைகள் வேறு சாப்பாட்டைச் சாப்பிடுவதற்கு தயாராகுவார்கள்; அல்லது வேறு ஒரு சாப்பாட்டு முறைக்குப் பழக்கப்படுகின்றன. இதோடு தாங்களாகவே எடுத்துச் சாப்பிட முயற்சிப் பார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நாட்டில் வாழும் பெரும்பாலான வெளிநாட்டுத் தாய்மார்கள் தங்கள் சொந்த நாட்டையும், உற்றார் உறவினரையும் விட்டுவிட்டு வந்து விட்டதால் தாங்கள் தனித்து விட்டோம் என்றும், எங்கள் குழந்தைகளுக்கு வேறு ஆட்கள் இல்லை என்றும் நினைக்கின்றார்கள், இது தொடர்பாக....

டெனிஸ் மக்களே ஒரு குறிப்பிட்ட குடும்ப அமைப்பில் வாழ்பவர்கள். இப்படியானவர்களே வெவ்வேறான இடங்களில் சந்திப்பதன் மூலமோ, அல்லது ஒரு விழாவில் கலந்து கொள்வதன் மூலமோ குழந்தைகளின் அனுபவங்களைப் பெற்றும் கொள்ளுகின்றார்கள். வெளிநாட்டுத் தாய்மார்களும் வெளியில் போய் மற்றவர்களோடு பழகுவதால் மாத்திரம் தான் சந்தோசமாக இருக்க முடியும். குழந்தைகள் தாய் தகப்பனின் முகங்களையே பார்த்துக் கொண்டிருப்பதை விட வெவ்வேறு மனித முகங்களைப் பார்ப்பது குழந்தையின் வளர்ச்சிக்கும் நல்லது. தனியே வீட்டுக்குள் முடங்கி விடாமல் குழந்தைகளுடன் வெளியில் சென்று மற்றவர்களோடு பழகுவதற்கு, கதைப்பதற்கு குழந்தைகளை அனுமதிக்க வேண்டும்.

தாய் தந்தையரின் முதல் அன்பு எப்போதும் குழந்தைகளுக்கு இருக்க வேண்டும். அப்படியானால் தான் குழந்தையும் தாய் தகப்பனில் அன்பாய் இருக்கும். அதனால் தான் மற்றவர்களோடு பழகுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அப்போது தான் குழந்தையானது மற்றவர்களிடமிருந்து பெற்றோரை உணர்ந்து கொள்ளும்.

பல குழந்தைகள் ஒரு எட்டு மாதங்களில் மற்றவர்களைக் கண்டு அழுவார்கள், கத்துவார்கள். அப்பொழுது அவர்களுக்கு நாங்கள் உன் பக்கத்தில் இருக்கின்றோம் என்பதை நன்கு தெளிவுபடுத்த வேண்டும். பின்பு சிறிது நேரத்தின் பின்பு குழந்தையானது வழமைக்குத் திரும்பி விடும். இப்படியாகத் தான் குழந்தைகள் ஒவ்வொன்றாக கற்றுக் கொள்ளுகின்றார்கள்.

பொதுவாக குழந்தை பிறந்து ஒரு மாதத்தின் பின்னர்

www.tamilarangam.net



குழந்தையோடு சகல தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தையானது பசியைத் தவிர மற்ற வேளையில் அழும் போது குழந்தைக்கு கேட்கக் கூடிய வகையிலும் பார்க்கக் கூடிய வகையிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு வரவேண்டும். தாய், தகப்பன் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால் குழந்தை பராமரிப்பு நிலையங்களுக்கு கட்டாயம் விட வேண்டும். தாய் தகப்பன் வேலை என்று அவசரமாக இருந்தாலும் குழந்தையைப் பற்றி கேட்டும், பார்த்தும் கவனித்துக் கொள்ள வேண்டும் எப்படியும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கீடு செய்து குழந்தையோடு அதைக் கழிக்க வேண்டும்.

சில பெற்றோருக்கு மிகமிக கொஞ்ச நேரம் தான் குழந்தையோடு இருக்கக் கிடைக்கின்றது. அந்த வேளையில் குழந்தையோடு விளையாடுவது, பாட்டுப்பாடிக் காட்டுவது, வெளியில் தூக்கிக் காட்டுவது கண்ணாடிக்கு முன்னால் வைத்து, 'இது அப்பாவின் மூக்கு' இது உன்னுடைய மூக்கு" என்று காட்டி குழந்தையோடு விளையாடுவதன் மூலம் குழந்தை சந்தோசமாக இருப்பதுடன் நல்ல உணர்ச்சியையும் அடையும்.

சில பெற்றோர்கள் கிடைக்கும் கொஞ்ச நேரத்திலும் குழந்தையோடு இருக்க முடியாமல் TV பார்ப்பது, அல்லது வேறு இன்னொரு வேலையில் ஈடுபடுவதால் குழந்தையானது தன்னோடு ஒருவரும் சேருவதில்லை என நினைத்துக் கவலைப்படும்.

மற்றது, இங்கே பிறந்து வளர்ந்து வரும் குழந்தைகள் தாங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்றோரின் குழந்தைக் கால அனுபவங்களை கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். பெற்றோர் கற்றுக் கொண்ட குழந்தைப் பாடல்களை, கதைகளை சொல்லிக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு கதைகளை வாசித்துக் காட்டுவதிலும் விட கதைகளைச் சொல்லுவதால் அவர்கள் இலகுவாக அதில் ஒன்றிவிடுவார்கள்.

பெற்றோர்கள் கிடைக்கும் அந்த கொஞ்ச நேரத்திலும் குழந்தைகளுக்கு படிக்க வழக்கங்களை கற்றுக் கொடுக்க முயல வேண்டும். குழந்தையிலிருந்தே 'அதைத் தொடாதே' "இதைத் தொடாதே" என்று சொல்லிச் சொல்லி வருவதால் படிக்க வழக்கங்களை கற்றுக் கொள்ளுகின்றார்கள். சில இடங்களில் குழந்தைகள் விடாப்பிடியாக நின்றாலும் 'Nej', "Nej" என்று திருப்பித் திருப்பிச் சொல்வதால் அவர்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. ஏன் என்றால் குழந்தைகளுக்கென ஒரு எல்லையிருக்கு. ஒரு குழந்தையானது எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் வளருமானால் காலப் போக்கில் "எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது" என்று கஸ்ரப்படுவதோடு பெற்றோரின் அன்பிலும் சந்தேகம் கொள்ளும்.

குழந்தைகளுக்கு அடிப்பது பற்றி.....?

குழந்தைகளுக்கு அடிப்பது என்பது மிகவும் பிழையான விடயம். முதலில் குழந்தைகள் ஏன் அடிக்கின்றார்கள் என்பதை புரிந்து கொள்ள மாட்டார்கள். திருப்பித் திருப்பிச் சொல்லுவதால் படிக்கத்துக்கு கொண்டுவரலாம். குழந்தைகளுக்கு அடிப்பதால் அவை உளவியல் பாதிப்புக்குள்ளாகுவார்கள் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறுதியாக.....

வெளிநாட்டவர்கள் மத்தியில் வேலை செய்வது பற்றி?

வெளிநாட்டவர்கள் மத்தியில் பணிபுரியும் எல்லாத்

(பக்கம் தொடர்ச்சி 38)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சம்மதங்கள்

ஓ... என் இறந்த காலங்களே
நீங்கள் என்றுமே இனியவர்கள்
ஏன் இப்போது தூங்கி விட்டீர்களா - இல்லை
தூக்கில் இடப்பட்டீர்களா
வேண்டாம் உமக்கு இந்த அகால மரணங்கள்.

சமாதானம் பேச வெள்ளைப் புறாக்களை பறக்கவிடவா
சீ... வேண்டாம் இந்த வினைத் தூதுவர்கள்
ஓ... தொலைந்த நம் நிஜங்களே
மீண்டும் கிடைப்பீர்கள் என்றால் கோடி சம்மதங்கள்
ஏ.. கதிரவனே உடனே மறைந்து விடு
வட்ட நிலவை உடன் அனுப்பு - என்
வழித் துணைக்கு கூட்டிச் செல்ல
ஓ... என் இறந்த காலங்களே
உமக்காக வாதிட என் ஆயிரம் சம்மதங்கள்
இந்த சம்மதங்கள் மௌனங்கள் அல்ல
சத்தமிட்டே சொல்லுகிறேன்.



அனந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல்லக்கு சுமப்பதே தமிழரின் வேலையா?

- ரவிக்குமார் -

இப்போது தமிழர் என்பது பற்றி அதிகம் பேசப்படுகின்றது. இப்படி பேசப்படும் ஒவ்வொரு பேச்சும் ஒவ்வொரு அரசியலை முன்வைக்கின்றது. தமிழர் என்பதை மையமாக வைத்து அண்மைக் காலத்தில் பேசப்பட்ட இரண்டு விசயங்களைப் பார்ப்போம்.

1. சிம்பொனி அமைத்து இளையராஜா என்ற 'தமிழர்' சாதனை செய்திருக்கின்றார்.

2. சாதனை செய்த "தமிழர்" சிவாஜிக்கு மரியாதை செய்யப்படல் வேண்டும்.

இளையராஜா தன்னைத் தமிழனாகக் கூறிக்கொண்ட போதிலும் அவரது சாதனை பற்றி முதலில் பாராளுமன்றத்தில் பேசிய வை. கோபாலசாமி முதற்கொண்டு பல்வேறு திராவிட இயக்கக் காரர்களும் அதைத் தமிழனின் சாதனையாக மட்டுமின்றி, பிராமணரல்லாத ஒருத்தரின் சாதனையாகவும் முன்வைத்தனர். இளையராஜாவுக்கு முக்கியத்துவம் தராத மத்திய அரசின் தொடர்பு சாதனங்களை மட்டுமன்றி பிராமணர்களையும் அவர்கள் விமர்சித்தனர். இளையராஜா என்ற பெயர் பிராமணரல்லாத ஒருவர் மிகப் பெரிய சாதனையைச் செய்ய முடியும் என்பதை நிரூபிக்கும் குறியீடாக மாற்றப்பட்டு பிராமணரல்லாதோரின் பெருமைப் பேச்சுக்கு காரணமாயிற்று. அவரைத் தொலைக்காட்சி புறக்கணித்த விபரம் மத்திய அரசின் தமிழர் விரோதத் தன்மையின் வெளிப்பாடு என்பதாக மட்டுமன்றி தொடர்பு சாதனங்களின் அதிகார மையங்களில் உள்ள பிராமணர்களின் சூழ்ச்சியாகவும் பார்க்கப்பட்டது.

www.tamilarangam.net

தமிழ் நாட்டில் திராவிட அரசியலின் அடுத்த சுற்று ஆரம்பித்திருப்பது போல ஒரு தோற்றம் உண்டாக்கப்படுகின்றது. ஆனால் அது ஒரு மாயத் தோற்றம் தான். உண்மையில் தி.மு.க வின் தொடக்க காலத்தில் பேசப்பட்ட தமிழர் அரசியலுக்கும், இப்போது பேசப்படும் தமிழர் அரசியலுக்கும் வேறுபாடுகள் உள்ளன. இப்போது தமிழர் பிரச்சினை வெறும் உணர்ச்சிமயமான கோஷங்களிலிருந்து விலகி தனது தர்க்க நியாயங்களைத் தேடத் துவங்கியுள்ளது. பிராமணரல்லாதாரின் பிரச்சினையை விடவும் தலித்துக்களின் நலனை மையப்படுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆனால் இதைத் திசை திருப்பும் முயற்சிகளும் நடக்கின்றன. அத்தகைய ஒரு முயற்சிதான் இளையராஜாவை முன்வைத்து உருவாக்கப்பட்ட தமிழர் அடையாளம். இதை முன்னை எடுப்பவராக வை. கோபால்சாமி இருக்கின்றார். இம்மாதிரியான திராவிட அரசியலை, பெரியாரின் மொழியில் சொல்வதனால் "கண்ணீர்த்துளி அரசியல்" எனலாம். அண்ணாத்துரையில் தொடங்கி இன்று வை. கோ. வரை வளர்கிறது இது.

தி.மு.க. விலிருந்து வெளியேற்றப்படும் நெருக்கடி, புதிதாகத் திரண்டு வரும் தலித் எழுச்சியின் வீரியம், இவை வை. கோ. வுக்கு சில சாத்தியங்களைக் கோடி காட்டியிருக்க வேண்டும். இளையராஜாவை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

மற்ற திராவிட அரசியற்காரர்களுக்கோ தீண்டாமை ஒழிப்பை முன்நிபந்தனையாக வைக்கும் தலித் அரசியல் ஏற்படுத்தும் நெருக்கடியை எதிர்கொள்ள இளையராஜா பயன்பட்டார். தலித்துக்கள் "தமிழர்கள் தான்" என உரக்கப் பேசி அவர்கள் இதைக் கடந்து செல்லப் பார்க்கின்றார்கள். பிராமணர்கள் மட்டும் தான் எதிரிகள் எனக் காட்டி மீண்டும் தப்பிக்க முயற்சிக்கின்றார்கள். ஆனால் தலித்துக்களை அவ்வளவு எளிதாக ஏமாற்ற முடியாது. குறிஞ்சாகுளத்தில் நான்கு தலித்துக்களை வெட்டிக் கொன்றது வை.கோ வின் உறவினர்கள்தான் என்பதை அவர்கள் மறந்துவிட மாட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'கண்ணீர் துளி' அரசியலின் முக்கியமானதொரு பண்பைக் கவனிக்க வேண்டும். மேல் தோற்றத்தில் பிராமணியத்தை எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்டாலும் உண்மையில் பிராமணியத்தின் அங்கமாகவே அது உள்ளது. பிராமணியம் முன்வைக்கும் வாழ்வியல் மதிப்பீடுகளை ஏற்றுக் கொள்வதும், அது நிர்ணயிக்கும் இலக்குகளையே சாதனை என நம்புவதும் இந்த அரசியலின் குணாம்சங்கள்.

இதனால்தான் காலனிய அடிமை உணர்வின் நீட்சியாக, கொஞ்சமும் வெட்கமின்றி சிம்பொனி அமைத்ததை சாதனையாகப் போற்றிக் கொள்கின்றார்கள். உண்மையிலேயே இசையின் பயன்பாட்டையும், சாதனையையும் உணர்ந்திருந்தால் இதுகாறும் நாய்களை விடக் கேடாக வைக்கப்பட்டிருந்த மக்களின் சார்பில் மேடையில் நின்று "மனுசங்கடா! நாங்க மனுசங்கடா!" என்று முழங்குகிறாரே கே.ஏ. குணசேகரன் - அவரைத் தான் சாதனையாளராகச் சொல்லியிருப்பார்கள். இதனை சரியாக உணர்ந்தால் தான் தலித் அரசியல், 'கண்ணீர் துளிகளின்' தமிழ் கோஷங்களை நிராகரிக்கின்றது.

சிவாஜி விசயத்துக்கு வருவோம். இந்தப் பிரச்சினையை மைய அரசு X தமிழர்கள் என்ற முரண்பாடாகக் கூடப் பார்க்காமல் மிக மிக மேலோட்டமாக வங்காளிகள் X தமிழர்கள் என்பதாகத் தான் எல்லோரும் பார்த்தார்கள்

கலையின் பயன்பாடு மனித சுதந்திரத்தை விரிவுபடுத்துவது என ஒப்புக் கொண்டால் நாம் சிவாஜியை விடவும் மிருணாள் சென்னைத் தான் சிறந்த கலைஞன்

www.tamilarangam.net

எனச் சொல்ல வேண்டியிருக்கும். இங்கே சிவாஜி ஒரு புனித பிம்பமாக மாற்றப்பட்டுள்ளார். சினிமாவை ஒரு விஷுவல் மீடியமாகப் பார்க்கும் பழக்கமில்லாததால் தான் நாம் சிவாஜியைப் புனித பிம்பமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். சினிமாவையும் சிவாஜின் நடிப்பையும் சரியாக அணுகினால் சிவாஜிக்கான மீடியம் சினிமாவே அல்ல என்பது நமக்குத் புரிந்துவிடும்.

இது ஒருபுறமிருக்க, சிவாஜியை முன்வைத்துப் பேசப்படும் தமிழர் அரசியலைக் கவனிப்போம். இளையராஜா போல, இங்கே பிராமணர்களை எதிராக முன்நிறுத்தி தமிழ் அடையாளம் கட்டப்படவில்லை.

இவர்களது கோபத்தின் (!) குறி மைய அரசோ, இது வரை சிவாஜியைக் கௌரவிக்காத, சென்னையில் படவிழா நடந்த போதும் கண்டு கொள்ளாத தமிழக அரசோ அல்ல. மேற்கு வங்காள அரசும் மிருணாள் சென்னுக்காக வாதாடிய வங்காளிகளும் தான் எதிரிகளாக சித்தரிக்கப் பட்டார்கள். "தமிழர்களுக்கிடையே எவ்வித வேறுபாடும் வேண்டாம் ஒன்றுபட்டு நிற்போம்' என அழைப்பு விடுக்கும் இந்தக் குரல் மறுநிலையில் வேறு சிலவேலைகளைச் செய்கிறது. அதில் முக்கியமாக இப்போதுள்ள நிலையை (Status Quo) அப்படியே தொடரும் படி இது குறிப்புணர்த்துகிறது.



பிராமணர்களை மட்டுமே எதிரிகளாகச் சித்தரிக்கும் கண்ணீர்த் துளி அரசியல், தமிழர் என்று பேசுவதன் மூலம் பிராமணரல்லாத சாதிகளில் ஆதிக்கப் பிரிவினர் கையில் அதிகாரத்தை குவிக்கின்றது.

வேற்றுமைகளே வேண்டாம் எனச் சொல்லி இருக்கின்ற

www.tamilarangam.net

நிலையை நீக்க விரும்புகின்றவர்கள், தமிழர் என்று பேசும் போது இன்று சமூக நிலையில் ஆதிக்கம் வகிக்கும் பிரிவி-னரே அதைத் தொடர்வதற்கு வாய்ப்பு உண்டாகின்றது.

மேற்சொன்ன இரண்டு வகையான அடையாளங்க-ளும் சமூகத்தின் அடிநிலை மக்களுக்கு அதிகாரத்தை தருவன அல்ல. மாறாக அதைத்தடுப்பனவாகவும் இருக்கின்றன.

அவர்களது நலன்களிலிருந்து பார்த்தால் இந்தத்தமிழ் அடையாளங்களை நிராகரிக்க வேண்டியது வரும். அடிநிலைத்தமிழர்களின் பிரதிநிதிகளாக இளையராஜாவோ சிவாஜியோ இருக்கவில்லை என்பது புரியும். இன்னமும் கூட பிம்பவழி-பாட்டில் மூழ்கிப் பல்லக்குத் தூக்குவது தேவையா என்ற கேள்வி எழும். தமிழர்களின் பிரச்சினைகள், வேறானவை என்பதும், அவர்களது சுரணையைத் தெரிந்து கொள்ள வேறுவிதமான அணுகுமுறை தேவை என்பதும் புலப்படும்.

---

45ம் பக்கத் தொடர்ச்சி :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 ஷ் | 3 டி | ■ | 5 தி | 6 ச | 7 ரு | ■ |
| 9 ண் | ■ | 11 தி | 12 ரு | 13 ன | 14 ம் | ■ | 16 உ |
| 17 ணி | 18 அ | 19 ணை | ■ | 21 ம் | 22 பு | 23 ரு | 24 க |
| ■ | 26 ரு | ■ | ■ | ■ | ■ | 31 க | 32 ண் |
| 33 அ | 34 வ | 35 ல | 36 ம் | ■ | 38 தி | ■ | 40 டா |
| 41 பா | 42 ம் | 43 ன | ■ | 45 பூ | 46 னக | 47 கா | ■ |
| 49 ய | ■ | ■ | 52 டை | 53 ஆ | ■ | 55 ந் | ■ |
| 57 ம் | 58 ர | 59 ன | 60 வா | ■ | 62 டு | 63 த | 64 மை |

1. P. RAJENDRAN

3520 FARUM

2. V. NATHAN

5800 NYBORG

www.tamilarangam.net

# தென்னவர்

கண்கள் பிதுங்கி
விழியோரம் கனத்து
ஓர் குளம் அங்கே வீழ்கிறது
கதிரிப்பேத்தியின் கையறுபட்டு
கதிர்கள் நனைகிறது.

வாய்க்கால் வழி சென்று
பாயும் குருதி
பசும் புல்லிலும் அங்கே
பொசிகிறது.
புல்லும் புல்லுருவிகளும்
நிறம் மாறின.
கதிரும் களையும்
கதிரவன் கண்பட்டு
செங்கதிராகின்றது

களையாய் நின்றவர்
களையெடுப்பார்,
கதிரவன் வரவைத்தடுப்பார்

அதோ !
கிழக்கிலே கிருத்தியம்
நடக்கிறது.
கண்கள் பிதுங்கி
விழியோரம் கனத்து
ஓர் குளம் அங்கே வீழ்கிறது.

கரவைதாசன்

www.tamilarangam.net

# மனவருத்தங்கள்

க.ஆதவன்

## வருத்தம் – 3

நான் இப்போழுது எழுதப் போகும் விஷயத்திற்கு "தாகம்" என்று தலையங்கம் போடலாம். கலைஞர்கள், எவ்வாறு சாதாரண மனிதர்களிலிருந்து வேறுபடுகிறார்கள்? என்ற கேள்வி, அன்றிலிருந்து இன்றுவரை தத்துவ ஞானிகள் தொடக்கம் விஞ்ஞானிகள் வரை கேட்கப்பட்டு விடை காண முடியாமல் திண்டாடிக் கொண்டிருக் கிறார்கள்.

'அகதி'களாக எப்படியோ புலம் பெயர்ந்து விட்டோம். எங்களிடையே- இங்கே கலைஞர்களும் சாதாரண மனிதர்களும் இருக்கிறார்கள். இந்தக் கும்பலை எப்படி இவன் கலைஞன்; இவன் சாதாரண மனிதன் என்று இனங் காண்பது? கலைஞனுக்குரிய கௌரவம் உண்மையிலேயே இங்குள்ள மக்களால் வழங்கப்படுகின்றதா? (சாதாரண மனித னுக்கே உரிய கௌரவம் எம்மவர்களால் 'மனிதன்' 'சகமனிதன்' என்றரீதியில் வழங் கப்படாதிருக்கும் பொழுது, கலைஞனுக் குரிய கௌரவத்தை வழங்கவில்லையே என, நான் வருத்தப்படுவது அபத்தம்)

புலம்பெயர்ந்த இந்தக் கும்பலிடையே கலையைப் படைக்க வேணும், கலையைப் போற்றவேணும், ஏதாவது வாசிக்கவேணும், ஏதாவது எழுதவேணும், ஆராவது நல்ல மனிதர் களுடன் பழகி தனது அறிவாற்றலை.... படைப்பாற்றலை விரிவாக்கிக் கொள்ள வேணும் என்ற ஆர்வங்கொண்டோரும் உள்ளனர்.

அவர்களுக்கு என்ன நடக்கின்றது? 'கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் விற்க வேண்டியது தானா?' 'காதிழந்த மனிதர் முன்னே இசைக்க வேண்டியதுதானா?'

எமது தமிழ்ச்சமூகம் கலைஞனை போற்றியே வாழ்ந்திரு க்கின்றது. அந்தக் காலத்தில்- தன் மனைவியின் கூந்தலின் மணம் செயற்கையானதா? என்ற சந்தேகத் தைப் போக்கும் 'கவிதை' க்கு 1000 பொன் பரிசளிக்கத் தயாராய் இருந்தான் ஒரு மாமன்னன்.

இப்போதைய வட்டிக் கணக்கின்படி, ஒரு 1000 குரோன் நான் அல்லது நீங்கள் கைமாற வேண்டியிருந்தால் அதற்கு ஒரு பவுண் ஒரு பொன் பொறுப்பாகக் கொடுக்கவேண்டும். அந்தக் காலத்தில் ஒரு நாலடிக்கவிதையின் விலை 1000 பொன்.

1000X800 (800வருடம் முந்தி)
1000X800X1000 (குறோனர் கணக்கில்)
1000X800X1000X7(குறோனர் கணக்கில்)

அதாவது 5600000000/= ஒரு நாலடிக் கவிதையின் பரிசு.

எனக்குத் தெரிந்த என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நண்பன் ஒருவன் அருமையாகக் கவிதை எழுதிக் கொண்டிருந்தான். தன் மனம், ஆத்மா, இதயம் எல்லாம் பிழிந்தெடுத்துக் கவிதை செய்தான். அவனது வரிகளை வாசிக்க வாசிக்க இதயத்திலிருந்து இரத்தம் வரும்.

ஒரு நாள் என்னிடம் வந்தான். "மாஸ்ரர், இனிக் கவிதை எழுதமாட்டன் இந்தச் சனங்கள் எதையும் வாசிக்கத் தயாராய்மில்லை, நான் படைக்கும் ஒவ்வொரு படைப்பினையும் விலை பேசுகிறார்கள், என் ஆத்மாவின் ராகங்கள் அழிந்து போகின்றன. என் ஏக்கப் பெருமூச்சில் கலந்து.... அன்றாடம் என் கனவுகளில் உருத்தந்து நான் உருவாக்கிய வரிகளை இவர்கள் ஏளனம் செய்கிறார்கள். என்னைப் பைத்தியம் என்கிறார்கள், விசரன்! அறுவையன்! சும்மா ஏதோ கிறுக்கிப் போட்டு எங்களை வந்து அறுக்கிறான் எண்டு சொல்கிறார்கள். எனக்குத் தாகமாய் இருக்கு. இலக்கியத் தாகம், கலைத்தாகம், ஆனால் இந்த மனிசரோடை ஒத்துப் போகவும் வேணும், நான் இனிக் கவிதை எழுதமாட்டன். என் தாகத்தைத் தீர்ப்பதற்கு இது இடமல்ல." என்றான்.

"அப்ப நீ என்ன செய்யப்போறாய்?" என்றேன்.

"நான் போடர் செய்யப் போறேன்" என்றான்.

"கலைக்கும் மக்களுக்கும் இடையிலா? என்றேன்.



"இல்லை, நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையிலை"

*                    *                    *

கலைஞர்கள் கிறிமினல்களாகிக் கொண்டிருக்கிறார்கள்...
அகதிகள் பெருகிக் கொண்டிருக் கிறார்கள்..."
வட்டி வளர்ந்து கொண்டிருக்கிறது....
கவிதையும் ஓவியமும் செத்துக் கொண்டிருக்கின்றது......

நான் எழுதிக் கொண்டிருக்கின்றேன்....

'வருத்தம்' கூடிக்கொண்டு போகிறது...!
'தாகம்' எடுக்கின்றது........!

www.tamilarangam.net

# கூட்டிக் காப்போம் வாரீர்

எஸ்.எம்.மதி

காலம் கொடுமைகள் பல புரிய கனிவான மண்ணையும் அன்பான உறவுகளின் அரவணைப்பையும் விட்டு கடல் கடந்து இந்த ஐரோப்பிய மண்ணிலே ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கிறது எம் தமிழ் இனம். சிதறுண்டு இருக்கும் எம்மவரில் பலர் மேற்கத்தைய நவ நாகரிகத்திலும், கலாச்சாரத்திலும் மோகம் கொண்டு அதன் வழியே நீச்சலடிக்கின்றனர். ஏனோ எமக்கு பின்னால் வரும் சந்ததியினரை எதிர் கால வாழ்வையும் மறந்து அதைப் பற்றி சிந்திக்காமலும் வாழும் வாழ்வை, நாம் விட்டு விடுவோம். நாம் பிறந்த மண்ணின் மகிமையும் எமது பாரம்பரிய கலாச்சாரத்தினையும் அறிந்தவர்கள் நாம். இதை எமது வருங்கால சந்ததியினர் அறிய வழி செய்வது எமது தலையாய கடமை. மேற்கத்தைய நாகரீகத்திலுள்ளும், கலாச்சாரத்திலுள்ளும் திணிக்கப் பட்டு திணறுகின்றது எமது வருங்கால தமிழ்ச் சமுதாயம்.

இவைகளை கவனத்தில் கொண்டு சில முற்போக்கான சிந்தனையுள்ளவர்கள் நட்புறவுச் சங்கம் என்றும் கலையகம் என்றும் கலாச்சாரக் கழகம் என்றும் கட்டி அமைத்து அதனூடாக எமது கலை கலாச்சார மொழிச்சிதைவினை தடுக்க முயல்கின்றனர். ஆனால் அதனுள்ளும் சில பப்பிளிசிட்டி விரும்பிகளின் நாசகாரச் செயல்கள் தலை தூக்கத்தான் செய்கின்றது. பப்பிளிசிட்டி தேடி அலைபவர்களே நீங்கள் இந்த மக்களுக்காக எதைச் செய்தீர்கள், செய்ய வேண்டியதை செய்து இருந்தால் பப்பிளிசிட்டி

www.tamilarangam.net

உங்களையல்லவா நாடி ஓடி வரும். இதனிடையே "நாம் வெளிவந்தது ஏன் அவன் தார காசை எடுத்து சாப்பிட்டு விட்டு நாடுண்டு நம் வேலையுண்டு எங்க சோலிகளைப் பார்த்துக் கொண்டு இருப்பம்" என்ற வாதத்துடன் இருப்பவர்களும், ஓரிடத்தில் ஒரு கழகமோ, கலையகமோ, சங்கமோ இருந்தால் அதைப் பார்த்து இந்த எனக்கு என்ன இலாபம்? இதனால் என் பிள்ளைகளுக்கு என்ன இலாபம்? இந்த சங்கம் என்ன செய்தது? இதால என்ன நன்மை? என்ற வினாக் குறியோடு உலாவரும் கூட்டமும் உண்டு.

அன்பான முகமுள்ள மனிதர்களே இவ்வாறு எல்லாம் நான், என்னுடையது, எனக்கு, நாடுண்டு நம் வேலையுண்டு என்று வாழ்ந்தால் இன்று எம் இனத்தில் எத்தனை அனர்த்தங்கள் நிகழ்கின்றது. என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு கழகத்தையோ சங்கத்தையோ பார்த்து எனக்கு என்ன இலாபம், எனக்கு என்ன பயன்? இவ்வாறு எனக்கு, எனக்கு, என்று வினாத் தொடுக்கின்றீர்களே அதையே சற்று மாற்றிப்பாருங்கள். என்னால் நான் பிறந்த மண்ணுக்கும் என் தமிழ் மொழிக்கும் என் தமிழ் இனத்திற்கும் என்ன இலாபம் என்ன பயன் என்று. இப்போது புரியும் உங்களுக்கு உங்கள் பிறப்பின் உண்மை நிலை.

அகதி என்னும் பெரியதோர் முத்திரையுடன் ஐரோப்பிய அரங்கில் அந்தலைத்தான அகதி வாழ்வு நாடகம் இன்னும் எத்தனை காலம்? காலங்கள் மாறும் என்பதை எம்மால் மறுக்க முடியுமா? எம் உயிர் உள்ள வரை எமது மொழியையும், எம் கலை கலாச்சாரத்தையும் கட்டிக் காப்போம். ஐரோப்பாவில் வளர்ந்து வரும் எமது இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தில் தாய் மொழி, தாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாமே, கலாச்சாரம் அதை வளர்வதை தடுப்போம். (இந்தியாவில் தமிழ் மொழியை இந்தி மொழித் திணிப்பில் இருந்து காந்ததும் ஒரு கழகம் அமைத்தான்) ஐரோப்பிய நாட்டிலே சந்திப்பின் நிகழ்வுகளில் சங்கமித்த நாம் சங்கமோ, கழகமோ, கலையகமோ கட்டி அமைப்போம். சாதி மத பேதம் மறப்போம்! ஐரோப்பிய தேசத்தில் சிதையும் எமது மொழி கலை கலாச்சாரத்தை அதனூடே கட்டிக்காப்போம் வாரீர்!

× — × —— × —— ×

---

## அறிமுகம்

முற்போக்கு நூல்கள் பத்திரிகைகள் ஒலி நாடாக்களுக்கு.


# கீழைக்காற்று

வெளியீட்டகம் - விற்பனையகம்

10, ஔலியா சாகிப் தெரு,

எல்லீசு சாலை, சென்னை - 600 002.

புதிய வரவு

- காந்தியும்-காங்கிரசும் ஒரு துரோக வரலாறு - பு.மா.இ.மு.
- டாக்டர். அம்பேதகர் எழுதிய நூல்கள் - தொகுதி I, II
- இந்து, இந்தி, இந்தியா - எஸ்.வி.ராஜதுரை
- TOWARDS COMMUNAL HARMONY - A Collection
- சமர் (தமிழ் அகதிகள் இலக்கியவட்டம், பிரான்சு)
- FRONTIER-WEEKLY
- A WORLD TO WIN
- அடிமைச்சாசனம் - ம.க.இ.க.
  (காட்-டங்கலுக்கு எதிரான பாடல் தொகுப்பு)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்னை அறியும் வரை...

நண்பனே!

உன் இயலாமையில் அத்திவாரமிட்டு
அறியாமையில் கோட்டை கட்டி
தம் பிதற்றல்களை
உனக்கு வேதமாக்கி
தம்மை அவதார புருசர் என
நீயும் தலையசைப்பாய்.

வித்தைகளைப் புனிதமென்று
எளிமை களைந் தெடுத்த
காவி உடையில்
உன் புனிதர்கள்
உனக்கு மட்டும்.
அவதாரங்கள்.

உன் தீராத தேடலுக்கு - அவர்
சாந்தி!.... சாந்தி!
எனும் சொற்பதங்கள்
தீனி போடும்.
இனி என்ன
அது வேண்டும் பேறிதெல்லாம்
அங்கே சரணடைந்து விடு.

www.tamilarangam.net

பாவாக்கள் மகரிசிகள்
ரஜனீவுகள் என்று
உன் தேடலுக்கு
தண்ணி காட்டும்
தெய்வப் பிறப்புக்கள்.
யதார்த்தத்தின் புறம் போக்குகள்.

மூடி வரும் காவியுடை
கிழிந்த பின்னே உன் பகவான்கள்
சமூகத்தின் கோட் ஃபாதர்கள்

ஊழல் அரசியலின் வேரோடிகள்.
உன் எதிரியின் ஆன்மீக கூட்டாளிகள்

எத்தனை உதாரண புருசர்கள்.
ரஜனீவுகள் பாதையிலே
பருவ எல்லையற்ற

உடலுறவும்
தன்னினச் சேர்க்கையுமே
மனித இனத்தின்
ஆத்ம தேடல்?

இந்த பகவான்கள் மறைந்தாலும்
நீ அநாதை அல்ல
உன் முன் வெற்றிடம் உள்ள மட்டும்
உன் கேள்விகள்
புதிராய் உள்ள மட்டும்
இன்னும் பிறப்பு எடுப்பர்
நீ விழிக்கும் வரை.

அருள். மாசிலாமணி
(இலண்டன்)

www.tamilarangam.net

# முட்டைக்கோஸ் — பொம்மை

- எமிலி நஸ்ரல்லா -

இந்தச் சொற்களை எனக்காகப் பதிவு செய்வது எது என்பது எனக்குத் தெரியாது. எனது மகளை எனக்குப்பின்னால் தரதரவென்று இழுத்துக் கொண்டு அண்மையில் உள்ள பாதுகாப்பிடம் நோக்கி ஓடும்போது தெருவின் நடுவே என்னிடமிருந்து நழுவி ஓடிய பேனாவா? அல்லது பெருந்தி விளைவித்த இடிபாடுகளுக்கு அடியிலிருந்து தூக்கியெடுக்கப்பட்டு பிளாஸ்டிக் பையினுள்- எனது உடம்பின் இரண்டாவது தோலாக மாறிய அந்தப் பிளாஸ்டிக் பையினுள்- திணிக்கப்பட்ட எனது உடலா?

'உடலை'ப்பற்றி நான் பேசுகையில் அதில் எஞ்சியுள்ளவற்றைப் பற்றித்தான் பேசுகிறேன்: சதைப்பிண்டங்களை, தோலுரிந்த, நார்நாராகக் கிழிந்த சதைப்பிண்டங்களைத்தான்; இவற்றுக்கும் சற்று நேரத்திற்குமுன் காரின் சாவிகளை ஒரு கையில் சுழற்றிக் கொண்டும் மறு கையில் அழகிய சிறுமி நெய்னாரின் கையைப் பிடித்துக் கொண்டும் அந்த சுப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்த உப்பரமான, ஒயிலான உருவத்திற்கும் எந்தப் பொருத்தமும் இல்லையே.

• • • •

நெய்னார்- அவளது பெற்றோரின் உள்ளத்தில் பெருமிதமும் மகிழ்ச்சியும் பெருகச் செய்தவள்; அவர்களது கண்மணி; நான்கு பருவங்களிலும் பூக்கும்மலர்; ஒவ்வொரு நாளும் புதுவண்ணத்தையும் புதுமணத்தையும் வழங்கியவள். அன்று- அது சனிக்கிழமை என்று நினைக்கிறேன்- காலையில் நேரத்திலேயே எழுந்துவிட்டாள். என் கட்டிலருகே வந்து என்னைத் தட்டியெழுப்பினாள்.

மொழிபெயர்ப்பு :

எஸ்.வி. ராஜதுரை, வ.கீதா

* புகழ் பெற்ற லெபனானியப் பெண் எழுத்தாளரது சிறுகதை.

"எழுந்திரும்மா"

"என்னடா கண்ணா" என்று கேட்டேன், தூக்கத்தின் எச்சங்களை என் கண்களிலிருந்து துடைத்தவாறே. "எழுந்திரும்மா", மறுபடியும் கட்டளையிட்டாள்.

"இன்னிக்கு சுப்பர் மார்கெட்டுக்குப் போய் முட்டைக்கோஸ் பொம்மை வாங்கித் தர்ரேன்று சொன்னியே எனக்கு அது வேணும்".



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் புன்னகைத்தேன். அவளை இழுத்து அணைத்துக் கொண்டேன். எனது அணைப்பின் கதகதப்புக்கு அவள் மசியவில்லை. அவள் என் படுக்கையில் ஏறி எனது மடியில் படுத்துப் புரண்டு எனக்குப் பரவசமூட்டத் தயாராக இல்லை. சூப்பர் மார்க்கெட்டுக்குப் போக வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தாள். அது ஒன்று தான் அவள் மனத்தை அன்று ஆக்கிரமித்திருந்தது.

நான் அவளைக் கேலிசெய்தேன்:

"தூங்கும்போது கூட முட்டைக்கோஸ் பொம்மையைப் பற்றிதான் கனவு கண்டியா?"

அவளுக்கு என் கேள்வி பிடிக்கவில்லை. பதிலேதும் பேசாமல் என் கைவிரல்களைப் பற்றிக் கொண்டிருந்த வண்ணமிருந்தாள்.

• • • •

உண்மையில் இரண்டுநாட்களுக்கு முன்புதான், ஒவ்வொரு சனிக்கிழமையும் வீட்டுச் சாமான்களை வாங்குவதற்காக இரண்டுமணிநேரம் ஒதுக்கிவிட வேண்டுமென்று முடிவு செய்திருந்தேன். ஒரு வீடுதான் தீராதபசியுடன் எத்தனை பொருட்களை விழுங்குகின்றது. சிலவேளைகளை அன்று செய்ய வேண்டுமென்று நன்கு திட்டமிட்டிருந்தேன். நெய்னாரின் குட்டிஆசையைத் தீர்க்கவும் அந்தநாள்தான் பயன்பட்டது. ஏனெனில் நான் வேலைக்குச் செல்லும் ஒரு தாய். எனது ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் திட்டமிட்டுச் செலவழிக்க வேண்டும்- எனது கடவுள்- எனது அதிகாரி, எனது குடும்பத் தலைவன் ஆகியோரைத் திருப்திப்படுத்த.

"இன்னும் நமக்கு இரண்டுமணி நேரமிருக்கு. சூப்பர் மார்க்கெட் அவ்வளவு தூரத்திலியும் இல்லை. 'ஹைவே'யில் வழக்கமான கும்பல் இல்லாம இருந்தா சரி" என்று நெய்னாரிடம் கூறினேன்.

நான் சொன்னதை அவள் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. என் காரிலிருந்த கண்ணாடியில் அவள் முகத்தைப் பார்த்தேன். ஜன்னல்பக்கமாகத் திரும்பிப் பார்வையைப் பதித்தபடி உட்கார்ந்திருந்த அவள் ஏதோ ஒரு நினைப்பில் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்கெதிரே தெரிந்த அனைத்தையும் குழந்தைகளுக்கே உரிய வியப்போடும் ஆர்வத்தோடும் பதிவுசெய்வதில் லயித்திருந்தாள். நான் அங்கிருப்பதே அவளுக்கு ஞாபகம் இல்லாமல் போய்விட்டது. என் பேச்சு எதனையும் அவள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

எனக்கோ ஒரே மகிழ்ச்சி. கடைக்குப் போய்வர வேண்டிய வேலையையும் குழந்தையை வெளியே அழைத்துச் செல்வதையும் ஒரே நேரத்தில் செய்யமுடிந்ததே என்று. நெய்னாரை விட்டுவிட்டு வேலைக்குச் சென்றுவிடும் நேரத்தை ஈடுகட்ட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். இந்த நாளில் எஞ்சியுள்ள நேரத்தை முடிந்த அளவுக்கு மகிழ்ச்சியான, ஆனந்தமான நொடிகளைக் கொண்டு நிரப்பிவிட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூப்பர் மார்க்கெட்டிற்கு அருகே ஒரு இடத்தில் காரை நிறுத்திவிட்டு, காரின்பின்புறக் கதவைத் திறந்து நெய்னார் வெளியேவர உதவினேன். கடையை நாங்கள் நடந்தோம். அதாவது நான் நடந்தேன். அவளோ ஓட்டமும் துள்ளலுமா, வட்டமிடும் வண்டைப்போல மேலும் கீழுமாகக் குதித்துக் கொண்டே வந்தாள். தேன்நிறக் கண்களும் ரோஜா உதடுகளும் கன்னங்களும் வசந்தகால மலர் போன்ற வாசமும் கொண்ட ஒரு சின்னவண்டு என் நெய்னார்.

கடைக்குச் சென்றவுடன் சாமான்களை எடுத்துச் செல்லப் பயன்படும் தள்ளுவண்டிகள் இருக்குமிடத்திற்குச் சென்று அவற்றிலொன்றை இழுத்துக் கொண்டு வந்து கட்டளைகள் போடத் தொடங்கினாள்.

"நாம இங்கிருந்து ஆரம்பிக்கலாம்மா". அவளது குட்டிவிரல்கள் பொம்மைகள் இருந்த பகுதியைச் சுட்டிக்காட்டின. வீட்டுக்குத் தேவையான சாமான்களை யெல்லாம் வாங்கிமுடித்த பிறகு அந்த மாயாஜாலப் பகுதிக்கு வரலாம் என்று கூறி அவளது மனத்தை மாற்ற முயன்றேன்.

அந்த ஏற்பாடு அவளுக்குப் பிடித்திருந்தது. என்றாலும் முகத்தைச் சுளித்துக் கொண்டே என்னைப் பார்த்தாள்: "இந்த பொம்மையெல்லாம் வீட்டுக்குத் தேவையில்லாத சமாச்சாரமா?"

மன்னிக்கவே முடியாத என் தவறை மறைப்பதற்காகப் புன்னகைத்தேன். "பொம்மைதான் ரொம்ப முக்கியமான விஷயம். அதனாலதான் மொதல்லே தொல்லை பிடிச்ச சாமான்களை வாங்கிட்டுக் கடைசிலே இங்க வரலாம்னுதான் பொம்மைகளை விட்டுவிட்டுப் போகிறோம். எல்லாத்தியும் முடிச்சிக்கிட்டு வந்தாத்தான் இங்க ரொம்ப நேரம் செலவளிக்கலாம்".

நான் சொன்ன வார்த்தைகளைவிட என் தொனிதான் அவளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியது. அவளும் தலையாட்டினாள். அவள் என்னுடனேயே நடந்து வந்தாள். ஆனால் அவ்வப்போது கைகளை நீட்டி இங்கொரு பாக்கெட், அங்கொரு பாக்கெட் என அலமாரிகளிலிருந்து எடுத்துவைத்து சாமான்கள் வாங்கும் வேலையைத் துரிதப்படுத்தினாள். அப்போதுதானே சூப்பர் மார்க்கெட்டுக்கு வந்த அவளது உண்மையான நோக்கத்தைப் பூர்த்திசெய்ய முடியும்.

• • • •

சூப்பர் மார்க்கெட்டில் கூட்டம் நிரம்பியிருந்தது. எல்லாச் சனிக்கிழமைகளிலும் இப்படித்தான். எனது நண்பர்கள் சிலரை அங்கு பார்த்தேன். அவர்களும் என்னைப் போல தங்கள் குழந்தைகளுடன் வந்திருந்தனர். அக் குழந்தைகளும் வியப்போடும், ஆனந்தத்தோடும் அவர்களோடு ஒட்டிக்கொண்டு வந்தனர். அந்த நண்பர்கள் வீட்டைவிட்டு வெளியே வந்திருந்தனர். இந்த நாட்களில் மிகச் சாதாரணமான காரியத்துக்காக வெளியே செல்வது கூட தெரியாத ஏதோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றை நோக்கிப் பயணிப்பதைப் போன்றதுதான்... மௌனம், இரைச்சல், இயக்கம், செயல், விழிப்புணர்வு, சோம்பல் எல்லாமே அப்படித்தான். இந்தச் சொற்கள் அனைத்துமே ஒரு அபாயத்தைக் குறிப்பவைதான். ஏனெனில் இப் போதெல்லாம் அபாயம் என்பது இந்த இடத்தில்தான், இந்த நேரத் தில்தான் நம்மை எதிர்கொள்ளும் என்பதில்லை. சிறகுமுளைத்த விதிபோல, இனந்தெரியாத ஒரு இடத்திலிருந்து கீழே இறங்கிவருகி றது. நகரங்கள், புறநகர்கள் ஆகிய வற்றிலுள்ள விட்டுக்கூரைகளின் மீது தனது இறகுகளை விரிக்கின் றது. பிறகு தனது இறகுகளை மடக் கிக் கொண்டு பறந்துபோகையில் அதுவிட்டுச் செல்வது சாம்பல் தான். அந்த இடத்தில் மனித சஞ் சாரம் இருந்தது என்பதற்கான ஒரே அறிகுறி இந்த எச்சங்கள்தாம்.

சிலநாட்களுக்கு முன்பு நடந்தது இதுதான். மக்களோடு சேர்ந்து அவர்களுடன் கலந்து உலவும் இந்த நினைவில் தங்கிவிட்டதும் இது தான். ஒவ்வொரு அசைவும், ஒவ் வொரு திருப்பமும், ஒவ்வொரு செயலும் நமது கவலைக்கான கார ணங்களை மீண்டும் நினைவுபடுத் துகின்றன. மறதி என்பதில் நாம் ஆறுதல் காண நினைத்தாலும் நினைவுகள் என்ற நரகத்தில் எரிந் துபோக நாம் மறுபடியும் மறுபடியும் வருவது நமக்குத் தெரிகின்றது. நேற்று சடெல் பாஷ்ரியே, அதற் குமுன் (*) சினெய்ல் ஃபில், அதற் கும் முன் பிர்ரால் அபெட், அதற் குமுன், அதற்குப்பின், அதன் விளைவாக, அதைத் தொடர்ந்து.....

பயங்கரமானதொரு அரக்கனைப் போல் மரணம் நம்மை நாலாபுற மும் பின் தொடர்கிறது. அதற்கு முடிவே இல்லை. எங்கு, எப்போது, எவ்வாறு மரணம் தன் வேலையை முடித்துக் கொண்டு நம்மை விட் டுப் புறப்படும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை.

ooooo ooooo ooooo

'இது ஒரு புதுப்பொம்மைம்மா. அரபுல இதுக்கு முட்டைக்கோ சன்னு பேரு. துணியில சுத்திவச்ச முட்டைக்கோசு மாதிரி இது இருக்கு. நாநா லண்டனிலிருந்து வந்தப்போ ஒன்னு வாங்கிட்டு வந்தா. ஜுஜுவோட அத்தை அவளுக்கொன்னு வாங்கிக் கொடுத்தாங்க. நீயும் எனக்கு இந்த பொம்மையை வாங்கித்தருவியா? இது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக் கும்மா, எல்லாத்தையும்விட இது தான் எனக்கு ரொம்பப் பிடிச்சி ருக்கு".

என் அனுமதிக்குக் காத்திருக்காம லேயே நெய்னார் அந்த பொம் மையை எடுத்து வைத்துக் கொண் டாள். அதை அணைத்தவாறே ஒரு குட்டி நடனம் ஆடினாள். அதை முத்தமிட்டாள், இறுக்க அணைத் துக் கொண்டாள்... எனது பொறாமையைத் தூண்டியவாறு. நான் சிறியவளாக இருந்தபோது இதுபோல தினுசு தினுசாக நிறைய பொம்மைகள் இருந்ததில்லை. மிஞ்சி மிஞ்சிப் போனால் எங்களுக் குக் கிடைத்ததெல்லாம் ஒரு காய்ந் துபோன குச்சி, தையல்பெட்டியி லிருந்து தூக்கியெறியப்பட்ட ஒரு

www.tamilarangam.net

பித்தான், ஒரு துண்டுத் துணி, கொஞ்சம் பஞ்சு, உடைந்துபோன சல்லடை, நால் கண்டுகள் ஆகிய னதான். பிறகு தொடங்கும் எங்கள் படைப்பு வேலை.

சிலமணிநேரங்களுக்குப் பிறகு அந்தப் பொருட்களெல்லாம் ரோஜாக் கன்னமும் சிவப்பு உதடுகளையும் கொண்ட ஒரு பொம்மையாக மாறிவிடும். பொம்மையின் தலை முடி பின்னால் இழுத்துக் கொண்டை போடப்பட்டிருக்கும் அல்லது அது அதன் தோளில் ஒயிலாக விழுந்திருக்கும். இந்தப் படைப்பு வேலை முடிந்தவுடன் பெயர் சூட்டும் வேலை ஆரம்பமாகும். கிராமத்தில் யாரும் கேள்விப்பட்டிராத பெயர்களைத் தேர்ந்தெடுப்போம்: மார்ஸிபான், ஃபர்பர், ஷென்ஷென், டூட்டா. இந்தப் பெயர்கள் எங்கள் கற்பனையில் உதித்தவை. அர்த்தமில்லாத இந்தச் சொற்கள் எங்கள் படைப்புகளுக்குப் பெயர்களாகச் சூட்டப்படும் போதே அர்த்தம் பெறும்.

நெய்னாரின் தலைமுறையோ அதிர்ஷ்டம் வாய்ந்தது. அவர்களது பொம்மைகள் 'லேஸ்' துணியால் சுற்றப்பட்டிருக்கும். அவற்றைச் செய்ய எந்த முயற்சியும் வேண்டாம்; தைக்கும் வேலையோ ஒட்டும் வேலையோ இல்லை. தங்களது படைப்புகள் மற்ற குழந்தைகளின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகக் கூடிய விகாரமான உருவங்க ளாக ஆகிவிடுமோ என்ற பயமும் அவர்களுக்கு இல்லை.

உண்மையில், என் மகளையும் அவளையொத்த பிறகுழந்தைகளையும் வியப்பிலாழ்த்தும் இந்த முட்டைக்கோஸ் பொம்மையை, தொலைந்துபோன ஒரு இணைப்புக் கண்ணியாகக் கருதலாம். அதாவது மானுட உருவிற்கும் அரக்க உருவிற்கும் இடையிலான ஒரு வடிவம் என்று. இந்தக் காரணத்தினால்தான் குழந்தைகளுக்கு அதன்மீது அத்தனை ஆசையா? அல்லது சாமர்த்தியமான விற்பனைத்திறனின் விளைவாக ஏற்பட்ட ஆசையா அது? இந்த மாதிரியான ஆய்வில் நேரத்தை ஏன் தான் நான் வீணடித்தேனோ? எனக்குள் எழுந்த முக்கியமான கேள்வி இதுதான் : கன்னாபின்னாவென்று இருக்கும் இந்த பொம்மையை இத்தனை விலைகொடுத்து வாங்க வேண்டுமா?

ஆனால் இந்த எண்ணத்தை நான் வெளியே காட்டி விடுவேனா என்ன? பொம்மைகளின் ராணியல்லவா இந்த முட்டைக்கோஸ் அம்மாள்! அவளைக் குறைகூறும் அளவுக்கு யாருக்கும் தைரியம் இருக்கிறது? ஒரு குழந்தையின் கனவைக் கலைக்க யாருக்கு தைரியம் இருக்கிறது? இந்த பொம்மைக்குப் பதிலாக வேறு பொம்மையை வாங்குமாறு நெய்னாரின் மனத்தை மாற்ற முயன்றேன் என்பதை நான் மறுக்கவில்லை. சாதாரணமான வேறுசில பொம்மைகளைச் சுட்டிக் காட்டினேன். அவை சர்வதேச

---

* சடேல் பாஷ்ரியே, சினேய்ல் ஃபில், பிர்ரால் அபேட் : லெபானானிலுள்ள நகரங்கள் (மொழிபெயர்ப்பாளர்).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினிமா உலகில் புகழ்பெற்று விளங்கிய நட்சத்திரங்களான ஏவா கார்ட்னெர், கிரேஸ் கெல்லி, கிரேட்டா கார்போ, மரிலின் மன்றோ ஆகியோரின் முகங்கள் கொண்ட பொம்மைகள்.

ஆனால் அவளோ அப்பொம்மைகளிலிருந்து தன்முகத்தைத் திருப்பிக் கொண்டாள்: "எல்லாமே பழைய காலத்து ஆளுங்க, எங்க காலத்துக்கு ஏத்தவங்க இல்லை".

என் மகளை நன்கு அறிந்தவள் நான். தனக்கு என்ன வேண்டும் என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும். அவள் துல்லியமான உணர்வு கொண்டவள். எந்த விஷயத்தையும் துருவித் துருவிப் பார்க்கக் கூடியவள். ஆனால் அவளை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று இப்போது தோன்றிற்று. அவளால் விஷயங்களை இவ்வாறு பிரித்துப் பார்க்கமுடியும், தலைமுறைகளுக்கிடையில் உள்ள வேறுபாட்டைக் கூர்மையாக வேறுபடுத்திப் பார்க்க முடியும் என்பதை நான் சிந்திக்கவேயில்லை. எனக்கு என்ன பிடிக்குமோ அது அவளுக்கும் கட்டாயம் பிடித்திருக்க வேண்டியதில்லை என்பதை நான் உணர்ந்திருக்கவில்லை.

கடைசியில் அவள் என் குறுக்கீட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு என் பர்சில் இருந்த பணத்தை வெளியே எடுக்கும்படி நிர்ப்பந்தித்தாள். பொம்மை வாங்குவதை இனியும் தள்ளிப்போடுவது என்ற கேள்விக்கே இடமில்லை.. அவளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டு வீட்டக்குத் திருப்பியழைத்துச் செல்ல என்னால் இயலவில்லை. அதுவும் அவள் இத்தனை நல்ல பெண்ணாக இருக்கும்போது, அவள் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை எனக்குள் ஊடுருவி என்னை நெகிழ்ச்சியடைய வைத்து சொல்லாமல் சொல்லியது: "நான் நல்ல பிள்ளையா நடந்துக்கிட்டேன்ல, நீ சொன்னபடி எனக்கு பொம்மையை வாங்கிக் கொடுத்திடுவியா?" பர்சை என் கை துழாவிக் கொண்டிருக்க, அவளை சமாதானப்படுத்துவதற்காக என் வாயைத் திறந்தேன், அவளிடம் சொல்ல-கையிலிருக்கும் பணம் பொம்மை வாங்கப் போதுமான...

நான் தொடர்ந்து பேசவில்லை. என் வாயைத்திறக்கிறேன். ஆனால் மூடமுடியவில்லை. அது கிழிவதை, அது தனது இடத்திலிருந்து பிய்த்தெறியப்படுவதை உணர்கிறேன். பர்சுக்குள் கையை நுழைக்கிறேன். ஆனால் பர்ஸ் என்னிடமிருந்து பறந்து செல்கிறது. எனது சாமான்கள், அவை அடுக்கி வைக்கப்பட்டிருந்த தள்ளுவண்டி, மனிதர்கள், செல்லக்குழந்தைகளால் தூழப்பட்டு தள்ளுவண்டிகளுடன் நின்றுகொண்டிருந்த தாய்மார்கள், கடையில் வேலைபார்க்கும் கணக்கர்கள், குவித்து வைக்கப்பட்டிருந்த விற்பனைப்பண்டங்கள், அலமாரிகள், கடைக் கணக்குப்புத்தகங்கள், கண்காணிக்கும் யந்திரங்கள், நுழைவாயில் கதவு, வெளிக்கதவு- இவையனைத்தும் என்னிடமிருந்து பறந்து சென்றன. கண்ணால் காணக்கூடிய பொருட்கள் எதுவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எஞ்சியிருக்கவில்லை. என்மகள் என்னருகில் இன்னும் இருப்பதை உணர்கிறேன். நெய்னார், நெய்னார் எங்கு சென்றுவிட்டாள்? முட்டைக் கோஸ் பொம்மையை அணைத்துக் கொண்டிருந்தாளே, அதன் கன்னத்தில் தன் தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டிருந்தாளே. அவள் என்னுடன்தானே இருந்தாள்...
என்னுடனா....?
நான் யார்? நான் எது? நான் இப்போது இங்கில்லை. நான் அங்கும் இல்லை. மின்னல் வேகத்தைக் காட்டிலும் விரைவாக நான் உருக்குலைந்து விட்டேன்.... எனது உறுப்புகள் எல்லா இடங்களிலும் சிதறிபுள்ளன. ஆனால் இப்போது இடம் என்று ஏதும் இல்லை... காலம் என்பதும் ஏதும் இல்லை.

குண்டு வெடிக்கும் சத்தம் என் காதில் விழவில்லை என்பதை ஒத்துக் கொள்கின்றேன். அந்தச் சத்தம் என்னை வந்தடைவதற்கு முன் என் காதுகளை இழந்துவிட்டேனோ என்னவோ?
'இழந்துவிட்டேனோ என்னவோ' என்று நான் சொல்லக்காரணம், நிச்சயங்கள் என்பன இனி ஏதும் இல்லை. மூலைகளில் நான் சிதறிக் கிடக்கிறேன். எனது கால்கள் மட்டும் ஒக் மரத்தின் பட்டைகளைப் போல் அப்படியே நிற்கின்றன. பின்னர் அவை தாமாகவே பறந்து செல்கின்றன- இலக்கு ஏதுமின்றி.

எனது நினைவுச் சிறகுகள் படபடக்கின்றன. நான் நெய்னாரின் முகத்தைக் காண்கின்றேன். இல்லை முகத்தைபல்ல... அவள்து ஆவியைத்தான்.

நினைவுக்கு எட்டாத தூரத்தில் அது நகர்ந்து செல்கின்றது.... பின்னர் அது என்னை நோக்கி வருவதைப் பார்க்கின்றேன். மகிழ்ச்சி தாங்காது வாயைத் திறந்து கத்த முயல்கின்றேன். ஆனால் எனது ஓலம் எங்கிருந்து ஒலிக்கும்? எனக்கோ தொண்டை இல்லை, குரல்வளை இல்லை.

அதோ எனது பர்ஸ்.
எனது நினைவு அதைப் பதிவு செய்கின்றது. அந்தப் பர்ஸ் அந்தக் கூட்டத்திற்கிடையே மாட்டிக்கொண்டு நசுங்கி வெளியே செல்ல முயற்சி செய்வதை நான் பார்க்கின்றேன். பிறகு அது கீழே விழுகிறது. எனது உடமைகளெல்லாம் போய்விட்டன. எனது ஆபரணங்கள், பணம், அடையாள அட்டை. அவை பர்சிலிருந்து வெளியேறி கதவுவழியே தப்பிச் செல்லப்பார்க்கின்றன.... ஆனால் கதவுகள் ஏதும் இல்லை. அவையும்கூட தகர்ந்து விழுந்துவிட்டன... அவை இப்போது கதவுகளாக இல்லை. கூரை பிளந்து வானம் தெரிகிறது. அங்கிருந்து நெருப்பும் உருக்கும் மழையாய்ப் பொழிகின்றன.

ஆம்.. அந்த அறையில் இருந்து புகை என் நினைவுக்கு வருகிறது. அடர்ந்த புகை. பொருட்களின் வடிவங்களையும் விளிம்புகளையும் புகை சூழ்ந்து மங்கலாக்குகிறது; ஆனால் புகை கலைந்த பின்னரே பொருட்கள் தமது இயல்பான தோற்றத்திற்குத் திரும்புகின்றன. ஆனால் எனக்குத் தெரியும், இது வேறுவகையான புகை. குண்டு வெடித்த இடத்திலிருந்து புகை கிளம்பிக் கொண்டிருந்தது, படர்கி

www.tamilarangam.net

றது, நாய்க்குடை போல் விரிகிறது. இடப்புறமும் வலப்புறமும், மேலும் கீழும் ஒவ்வொரு மூலை முடுக்கி லும் புகுந்து கொள்கிறது. அது கிராமத்து வீட்டுச் சமையலறையி லிருந்தோ அல்லது குளிர்காய்வதற் காக மூட்டப்பட்ட நெருப்பிலி ருந்தோ எழும் இதமான புகை யல்ல. கோபத்தின் வெடிப்பையும் குரோதத்தின் சீற்றத்தையும் பகை மையின் ஆற்றலையும் தனக்குள் கொண்டிருந்த புகை அது.

நான். இத்தனையையும் சொன்ன பிறகு எனது கதையை நிறுத்திக் கொள்ள என்னை அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன். எனது உதடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்து விட்டன. எனது மூட்டுகள் உடைந்து சிதறியுள்ளன. எனது ஒரு பகுதி எரிந்து கருகியுள்ளது.

எனது சின்னமலர், எனது வாசமிக்க இனிய ரோஜாமலர், நெய்னார்-பொம்மையில்லாமல் அவள் கடையைவிட்டு எப்படி வருவாள்... எனக்கு ஞாபகம் வருகிறது... பொம் மைக்கு நான் பணம் தரவில்லை... எனது பர்சில் போதுமான பணம் இருந்த போதிலும்....

நன்றி: மௌனம்.
நவ. டிச.93 - ஜன.94.

"இது தான் கலையின் இரகசியம். கலையில் உண்மை என்று சொல்லப்படுவது இதுதான். இப்படித்தான் கலைஞன் உண்மைக்குச் சேவை புரியவேண்டும். உங்கள் கண்களுக்கு உண்மை தெரிகிறது. உண்மையின் காட்சி உங்களுக்கென திறந்து விடப்பட்டிருக்கிறது. கலைஞனுக்கு இதுதான் மிகப்பெரிய வெகுமதி. இதன் மதிப்பை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வெகுமதிக்கு எப்போதும் உண்மையாக இருங்கள். நீங்கள் மாபெரும் எழுத்தாளராக ஆக முடியும்."
– பெலின்ஸ்க்கி –

நூல் அறிமுகம்:

# மௌனம்

கலை இலக்கியக் காலாண்டிதழ்

தொடர்புகள்: 6 Squarc du Roule/ 92200 NEUILLY S/ SEINE/ FRANCE

www.tamilarangam.net

15ம் பக்கத்தொடர்ச்சி...

தாதிமார்கள் நல்ல சந்தோசமான அனுபவங்களையே பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் நாட்டிலிருந்த வழக்கமுறைகள் (தாய் மூலமாக, குடும்ப மூலமாக கற்றுக் கொண்டு வந்த) அழிந்து கொண்டு போகும் வேளையில் தான் இப் படியான தொழில் அமைப்பு உருவாகியிருக்கின்றது. இதை நாங்கள் வேறு கலாச்சாரத்தில் உள்ளவர்களுக்கும் கற்றுக் கொடுக்க வாய்ப்பு இருக்கின்றது. அதே போல் மற்றக் கலாச்சாரத்தில் உள்ளவற்றையும் அறிந்து கொள்ள நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றது. வெளிநாட்டவர்களிடமிருந்து நாம் எமக்கென தனியே கற்றுக் கொண்டதை விட மற்றவர்களுக்கென சொல்லிக் கொடுப்பதற்கு கற்றுக் கொண்டவையே அதிகம்.

நன்றி.

மேற்றும்.

---

25 வது இதழ் தொடர்ச்சி

# கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?

**தங்கரூபன்**

மேற்குறித்த எவரும் குற்றவாளிகள் என தண்டிக்கப்படவில்லை. இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், சமீபத்தில் முன்னைநாள் கிழக்கு ஜேர்மன் அதிபர் எறிக் கோனேகர் 12 பேரின் கொலைக்குக் காரணமானவர் எனக் கூறி மேற்கு ஜேர்மனிய சட்டப்படி குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, கடுந்தண்டனை கொடுக்க முயற்சித்து வருகின்றனர் ஏகாதிபத்திய வாதிகள்.

CIA யினால் பல லட்சம் மக்களைப் படுகொலை செய்ததைச் சற்றும் சிந்திக்காத ஏகாதிபத்தியவாதிகள் கோனேகரை தண்டிக்கத் துடிக்கின்றனர். கோனேகரை தண்டிப்பதற்கு கேடுகெட்ட ஏகாதிபத்திய வாதிகளுக்கு உரிமையோ, அருகதையோ கிடையாது. தண்டனை வழங்கும் உரிமை கிழக்கு ஜேர்மனியைச் சேர்ந்த மக்களுக்கே உரியதாகும். "கம்யூனிசம்" என்ற பெயரில் நாட்டைச் சீரழித்ததற்காக.

www.tamilarangam.net

இன்று மேற்கத்திய நாடுகளின் வளர்ச்சி, ஜனநாயகம் வறிய, மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டிக் கட்டியெழுப்பப்பட்டதே. 'வளர்ச்சியடைந்த நாடுகள்' என தம்மைப் பற்றிப் பெருமையடிக்கும் இந் நாடுகள் யாவும் மற்றைய நாடுகளை பல தசாப்தங்களாக தங்களது காலனிய நாடாக வைத்திருந்ததன் மூலமே நிறைவேற்றிக் கொண்டன. ஏழை நாட்டுத் தொழிலாளர்களின் உரிமைகளைக் காலில் போட்டு மிதித்துக் கொண்டே தமது நாட்டுத் தொழிலாளர்களுக்கு சில சலுகைகளைக் கொடுத்து, தமக்கு எதிராக கிளர்ச்சி செய்யாமல் கண்காணிக்கின்றனர்.

கைத்தொழில் வளர்ச்சியால் ஏற்படுகின்ற நலன்களை ஏகாதிபத்தியங்கள் அனுபவித்துக் கொண்டு, அதனால் விளைகின்ற சுற்றாடல் அசுத்தமாகுதல் போன்ற மனித நலக் கேடுகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு விட்டு விடுகின்றன. உதாரணமாக, கைத்தொழிலில் பயன்படுத்தி, அதனால் ஏற்படுகின்ற இரசாயன, நச்சுக் கழிவுகள் யாவும் இந்து சமுத்திரத்திலும், ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் கப்பலில் ஏற்றிச் சென்று கொட்டப்பட்டு வருகின்றது. ஆபிரிக்க நாடொன்றில் இவை சட்டபூர்வமாக இயங்குகிறது. ஏனெனில் மேற்கத்திய நாடுகளிடமிருந்து அன்னியசெலாவணியைப் பெற இக் கொடிய, பாதகச் செயல்களுக்கு சில வறியநாட்டு அரசுகள் துணை போகின்றன. இதனால் பல புதிய தொற்று வியாதிகளுக்கு அந்நாட்டு மக்கள் பலியாகி வருவதாக சூழல்; சுற்றாடல் அமைப்புகள் கண்டனம் செய்துள்ளன. ஜேர்மனியிலிருந்து திருட்டுத்தனமாக இரசாயன கழிவுகள் கொட்டப்பட்டு, குறிப்பிட்ட பிரதேச மண் நஞ்சு ஊறியுள்ளதாகவும், அங்கு விளையாடிய சிறுகுழந்தைகள் உயிர் ஆபத்து ஏற்பட்டுத் தப்பியதாகவும், இப்படியான சட்டபூர்வமற்ற நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் எனவும், குறித்த கம்பனி நட்டஈடு செலுத்தவேண்டும் எனவும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் ஆசிய, ஆபிரிக்க கடல்களில் கப்பல், கப்பல்களாக இரசாயன நச்சுக் கழிவுகள் கொட்டப்படுவதால் கடல் உயிரினங்கள் அழிந்து போவதைப் பற்றியோ ஏகாதிபத்தியங்கள் எள்ளளவும் சிந்திப்பதேயில்லை. இவர்கள் உபதேசிக்கும் மனித உரிமை, ஜனநாயகம் யாவும் ஐரோப்பிய வெள்ளையருக்கு மாத்திரமே.

உலகின் உயிர் வாழ்வைக் காக்கும் பகுதி என அழைக்கப்படும் 'மழைக்காடுகள்' அழிக்கப்பட்டு வருவதும், அங்கு வாழும் ஆதிவாசிகள், பூர்வகுடிமக்கள் இவ்வழிவுகளால் அவ்விடத்தை விட்டு துரத்தியடிக்கப்படுவதற்கும், அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா போன்ற கைத் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளே காரணம் ஆகும். எண்ணெய் எடுப்பதற்காக மழைக்காடுகளில் உள்ள மரங்கள், செடிகள் எவ்வித பார்வையுமின்றி வெட்டி வீழ்த்தப்படுகின்றன. மழைக்காடுகளில் உள்ள தரமான மரங்கள் யாவும் தறிக்கப்பட்டு மேற்குலக முதலாளிகளின் மாளிகைக்கு அலங்கார, புதிய டிசைன் தளபாடங்களாக்கப்பட்டு வருகின்றன. INFORMATION SOCIETY (செய்திச் சமுதாயம்) எனத் தம்மைப் பெருமைப்படுத்தும் மேற்கத்தியர், மழைக்காடுகளிலிருந்து வரும் "மலிவான" மரங்களைத் தமது செய்திகளை வெளியிடுதற்குப் பயன்படுத்துகின்றார்கள்.

1992ம் ஆண்டு நடைபெற்ற "சுற்றுப்புற, சூழல் பாதுகாப்பு" மாநாட்டில் பங்கு கொண்ட பெரும்பாலான நாடுகள் இப்பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வு காண வேண்டும் என ஒப்புக் கொண்டு கைச்சாத்தும் இட்டன. ஆனால்

www.tamilarangam.net

உலகில் ஜனநாயகத்தைப் போதிக்கும் அமெரிக்கா மாத்திரம் கைச்சாத்திட மறுத்துவிட்டது. ஏனெனில் இத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் தனக்கு பாதகம் என்பதாலேயே கைச்சாத்திட மறுத்தது. உலக மக்கள் எக்கேடு, கெட்டாலும் பரவாயில்லை, அமெரிக்கா பாதிக்கப்படக்கூடாது. இது தான் அமெரிக்காவின் "நாகரிகம்", ஜனநாயகம்.

அமெரிக்க ராணுவ தளமாக இருந்த பிலிப்பைன்ஸ் கடல் பகுதிகள் மிகவும் அசுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதிகளில் வாழும் மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அப்பகுதிகளில், கப்பல்களிலிருந்து வரும் கழிவுகள் (எண்ணெய், பெட்ரோல்) கொட்டப்பட்டு அக்கடலிலுள்ள மீன்கள் பெருமளவு அழிக்கப்பட்டுள்ளதால் லட்சக்கணக்கான மீன்பிடித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸ் பகுதிகளிலிருந்து தனது ராணுவத்தை திருப்பி அழைத்துக் கொண்டுள்ள அமெரிக்கா, மேற்குறித்த குற்றங்களுக்கு நட்ட ஈடு கொடுக்க மறுத்து வருகிறது.

உலக சனத்தொகையில் 24 வீதத்தைக் கொண்ட தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் (அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, உள்ளிட்ட) பூமியின் மொத்த மூலவளங்களில் 70 – 90 வீதம் வரை பாவிக்கின்றன.

சுற்றுப்புற, சூழல் பாதுகாப்பு மாநாட்டில், அமெரிக்கா கைச்சாத்திட மறுத்ததையடுத்து, ஆத்திரமுற்ற பிரேசில் மக்கள் பெருந்திரளாகத் திரண்டு, அமெரிக்காவுக்கும், புஷ்ஷுக்கு எதிராகவும் ஊர்வலங்கள் நடாத்தித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அமெரிக்காவின் அடாவடித்தனத்தை மேற்கத்திய 'ஜனநாயக வாதிகள்' செல்லமாகத்தான் கண்டித்தார்கள்.




"புஷ் வெளியேறு, அமேசன் எங்களுடையது" அமெரிக்க எதிர்ப்பு ஊர்வலம்.

www.tamilarangam.net

இது மாத்திரமா? தமது நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்துகளை, வேறு பெயர் மாற்றி மூன்றாம் உலக நாடுகளில் விற்பனை செய்கின்றன ஏகாதிபத்தியங்கள். அஸ்பிரின் என்ற மாத்திரை தீங்கு விளைவிக்கக்கூடியது என்று காரணத்திற்காக அவை மேற்கு நாடுகளில் தடைசெய்யப்பட்டிருப்பினும், மூன்றாம் உலக நாடுகளில் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றது. அதை உற்பத்தி செய்யும் ஜேர்மன் கம்பனியான HOCIHST தனது நாட்டில் உற்பத்தி செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனிதநலக் கேடான இத்தகைய மருந்துகளை, தமது அடிவருடி டாக்டர்களை ஏழை நாடுகளில் வாங்கி, அவர்கள் மூலம் விற்பனை செய்து லாபமடித்து வருகின்றார்கள் மேற்குல முதலாளிகள்.

"லாபமடிக்க வேண்டும் என்றால் ஏன் கொலை செய்யக் கூடாது"..? என்பது தான் இவர்களது தாரக மந்திரம்.



பிரேசில் தலைநகரான றியோடி ஜெனைரோவில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதி புஷ்ஷை எதிர்த்து ஊர்வலம் நடாத்திய மக்கள்.

ஹேக்ஸ்ட் (HOECHST), பாஸ்ஃப் (BASF), பாயர் (BAYER) என்ற மூன்று புகழ்பெற்ற ஜேர்மனிய மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் ஐ.ஜி.பார்பன் என்ற ஒரே பெயரில் நிறுவனமாக இருந்த போது, நாஜிகளின் சித்திரவதை முகாம்களில் இருந்து பரிசோதனைக்கு என யூதர்களையும், ஜிப்சி இன மக்களையும் பாவித்தது. இது சர்வதேச குற்றம் என்று தெரிந்தே தான் நடைபெற்றது. இன்று வரையும் அதே பாணியில் இந் நிறுவனங்கள் வெவ்வேறு வழிகளில் செய்து வருகின்றது. மனிதர்களை மருந்து பரிசோதனைகளுக்குட்படுத்துவது ஓர் கிரிமினல் குற்றம் என உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (மேற்படி மூன்றாம் உலக நாடுகளில், மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் மருத்துவத் துறையில் செய்து வரும் மோசடிகளை பேராசிரியர் அ.மார்க்ஸ் "நமது மருத்துவ நலப்பிரச்சனைகள்" என்ற நூலில் நிறைய ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.)

www.tamilarangam.net

இத்தனை துரோகங்களையும் செய்து கொண்டே வறிய நாடுகளுக்கு உணவளிப்பதாக வேடமிடுகின்றனர். சோமாலியாவில் "உதவி" என்ற பெயரில் ஆக்கிரமித்தனர். உதவியென்று போய் சண்டையிட்டு வருவதும், மக்களைத் துன்புறுத்துவதையும் நாம் அறிந்து சொல்ல முடிகின்றது. உண்மையில் சோமாலியாவின் மிகப்பெரிய ராணுவம் ஒஸ்மான் அரோ (OSMAN ATO) என்ற வியாபாரியினால் நிதியிடப்பட்டது என்பதும், ஒஸ்மான் அரோ அமெரிக்காவுடன், அமெரிக்க எண்ணெய் நிறுவனமான CONOCO விற்கும், நெருங்கிய தொடர்பு என்பதை மறைத்துள்ளார்கள். இதை எந்தவொரு தொடர்புச் சாதனமும் வெளிப்படையாகக் கூறவில்லை. ஏன்...?

இதே போலத்தான் PANAMA விலும், ஈராக்கிலும் ராணுவத்தை அனுப்பி ஆக்கிரமிப்பதையும், தான் விரும்பிய இடத்தில் ராணுவத்தை அனுப்பி, தான் நினைப்பவைகளை செய்வதை "இயற்கை" எனும் விதியை உருவாக்கியுள்ளனர்.

1991ம் ஆண்டு பிரான்ஸ், பெல்ஜிய ராணுவம், ஆபிரிக்க நாடான ZAIRE ல் நடைபெற்ற கலவரத்தைக் காரணம் காட்டி, அங்கு வாழும் பிரான்ஸ் நாட்டவர்களைக் காப்பதாகக் கூறி 11.000 பேர் கொண்ட ராணுவத்தை அனுப்பினர். இதனை எந்தவொரு 'ஜனநாயக' நாடும் கண்டு கொள்ளவில்லை. ஏன்..? இதனைச் சற்று மாற்றி, ஒரு உதாரணம் பார்ப்போம்.

ஜேர்மனியில் வாழும் துருக்கியர்களுக்கு புதிய நாஜிகளால் ஏற்படும் அபாயத்தைக் காரணம் காட்டி, துருக்கிய அரசு 11.000 பேரைக் கொண்ட ராணுவத்தை அனுப்பி துருக்கியரைக் காக்கப் போவதாகக் கூறினால் எப்படியிருக்கும்.? நிலைமை என்னவாகும்..? ஒரு முறை கற்பனை செய்து பாருங்கள்.

இந் நடவடிக்கைகள் உலகரீதியில் வெள்ளையின ஆதிக்கத்தை நிறுவுவதும், மற்றைய நாடுகளுக்கு அத்தகைய அதிகாரமில்லை என்பதையுமே பறைசாற்றுகின்றன. இதனையே ஈராக்கிலும், பனாமாவிலும் அப்பாவி மக்களைக் கொன்றதன் மூலம் 'வெள்ளை நிறத்தவரே உயர்ந்த இனம்' என்பதை நிரூபிக்கும் முயற்சியே இவை. இன்னும் ஒரு படிமேலே போய் அதற்கான நோக்கத்துடனேயே "ஐரோப்பியப் பொதுச் சபை" யை உருவாக்கியிருக்கின்றனர். இன்னும் ஒரு படி மேல் போய் ஜேர்மனியும், பிரான்சும் "யூரோ ராணுவம்" என ஓர் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டனர். அத்திட்டம் எதிர்ப்புக்களால் அடங்கிப் போனது. இத்தனைக்கும் NATO ராணுவ ஒப்பந்தம் கலைக்கப்படவில்லை. போலிக் கம்யூனிஸ்டுக்கள் ஆட்சியை விட்டு ஓடி ஒழிந்ததும் WARSAW ஒப்பந்தம் கலைக்கப்பட்டு விட்டது. ஆனால் NATO ஒப்பந்தம் கலைக்கப்படவில்லை. இவர்களின் எதிரிகள் யார்?

புரட்சிகர சக்திகளும், ஜனநாயக சக்திகளுமே.

முதலாளித்துவ சீரழிவுக் கலாச்சாரத்தில் திசைமாறியவர்களுக்கு நாஜித்தத்துவம் வழிகாட்டுகின்றது. ஜேர்மனியில் இந் நாஜிகள், பொலிஸ் உதவியுடன் அகதிகள் மீது நடாத்தும் தாக்குதல்கள் முதலாளித்துவ ஆதரவாளர்களை வாய்மூட வைத்துள்ளது.

(அடுத்த இதழில் முற்றும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொலைந்து போனது

விடியற்காலை வேளையில்
3000 அடி உயரத்தில்
கண்டி மாநகரில் மெல்லிய குளிரில்
தும்பு மெத்தையில் படுத்தும்
தலையணிகளில் உடல் புதைத்தும்
தூக்கம் தொலைந்து போனது.

நிசப்தமான அவ்விரவில்
காக்கைகள் கரைவதும்
பேர் தெரியாதனவெல்லாம்
அவைகளின் பாஷையில்
பரிமாறுவனவும் காதுகளில்
நாராசமாய் ஒலிப்பது,
தாய் நாட்டில்
நயவஞ்சகர்களின் இழிசெயல்கள்
மிருகங்கள் அடாவடித்தனங்கள்.
தொடரும் அவலங்கள்
வெளிநாட்டுச் சோதரரின்
துன்ப நிலை காரணமாகவோ..?


தொலைந்து போன எமது தேசத்தில்
எமதினத்தின்
அமைதியான தூக்கத்திற்காய்,
நான் ஏதாவது செய்வதற்காய்
எனது தூக்கம் தொலையட்டும்!

-: தர்மசீலன் :-

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

இல : 24



குறுக்கெழுத்துப்போட்டியில் பலர் ஆர்வம் காட்டியுள்ளமை, எமக்கு கிடைத்த விடைத்தாள்கள்மூலம் தெரிவித்துள்ளது. போட்டியில் கலந்து கொண்டோருக்கும், பரிசுகள் கிடைத்தோருக்கும் எமது வாழ்த்துகள்.

பரிசுகளாக கவிதைத்தொகுப்பு, சிறுவர் நூல்கள், ஏனைய சஞ்சிகைகள் என்ற வகையில் அனுப்பிவைக்கப்படும். சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக்கிரமத்தில் கிடைத்ததும், 15 நாட்களுக்குள் கு. எ. போட்டியின் பூர்த்தி செய்த தாளினை சஞ்சீவிக்கு அனுப்பிவையுங்கள்.
போட்டியின் பரிசுக்குரியவர்களென சஞ்சீவியில் பெயர்கள் வெளியானோரில் சிலருக்கு பரிசில்கள் கிடைக்கவில்லையென அறிகின்றோம். அப்படி பரிசில்கள் கிடைக்கப்பெறாதோர் சஞ்சீவியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (எழுத்துமூலம்).

இட - வலம்:

1. 4: இது இனிமையான கலைவரம்பரம்.
6. 8: கடவுள் அற்றோரை மட்டுமல்ல, இது இருந்தும் எதிலும் பாராமுகத்துடன் வாழ்வோரை இப்படிக் கூறுவர்.
15. 16: உடலின் முக்கிய பகுதிகளில் இதுவும் ஒரு தொகுதியாகும்.
25. 30: புனைந்து சொல்லும் கதையினை இப்படியும் கூறுவர்.
-32-: ஒரு தமிழ் மாதத்தின் பெயர்.
36. 39: உணவு உட்கொள்ளும்போது, ஏற்படும் வாயு அழுத்தக் காரணமாக இது ஏற்படும். மூச்சை அடக்கி மெதுவாகச் சுவாசிப்பதன் மூலம் இதனை நீக்கிக் கொள்ளலாம். இது குழம்பியுள்ளது.
45. 42: விடயங்களை உள்வாங்கி மனதில் பதித்தலை இப்படிச் சொல்வர்.
47. 48: வேகம், இதனை இப்படியும் கூறுவர்.

www.tamilarangam.net

54. 52: இது மக்கள் என்ற பொருளாகும்.
57. 59: இது சமயம் ஆகும். யானைக்கும் இது பிடித்துக்கொள்ளும்.
61. 62: மழைக்கும், வெய்யிலுக்கும் இதனைப் பிடிப்பர்.

மேல் - கீழ்:

1. 35: இரு பக்கப் பிரச்சினையின் தீர்வுக்கு, முதல் இது தேவை.
3. 27: இது ஓர் வகை இன ஆடு ஆகும்.
7. 23: ஒருவர் - மற்றவருக்கு விடயங்களை விளக்கிப் போதிப்பதை இப்படிச் சொல்வர்.
8. 16: முற்காலத்திலும், இப்போதும் கூட மாலுமிகளுக்கு - நட்சத்திரங்களே இதனை தெரியப்படுத்துகின்றன.
13. 61: மனிதன் எடை போடுதலை இப்படிக் கூறுவர் - இது குழம்பியுள்ளது.
18. 42: மைதானச் சிறார்கள் இதனை காற்றில் பறக்கவிட்டு சந்தோசமாக விளையாடிய இடங்களில் எம் எதிரிப் படைகளின் விமானங்கள் குண்டுபொழிகின்றன.
20. 2: கட்டுப்பாட்டுடன் சேவை செய்தலே இது.
38. 30: இது நிறைவானதாய் இருப்பின், இதன் இனமரம் - விருத்தியடையும்.
47. 39: முற்கால ஆயுதங்களில் இதுவும் ஒன்று.
54. 62: தலைமுடியினை இப்படிச் சொல்லலாம்.
57. 49: இது போதை தரும்.
64. 48 ஓலையால் வேயப்பட்டதிது இருப்பிடம் இதுவாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல: 23ன் பதில்கள்:

இடம் - வலம்:
1. 8: கல்வி.
5. 7: பிசுகு.
11. 14: தருணம்.
21. 24: கரும்பு.
31. 32: கண்.
33. 36: அவலம்.
41. 43: பாணம்.
47. 45: நாழிகை.
53. 52: ஆடை.
60. 57: வாரணம்.
62. 64: முதுமை.

மேல் - கீழ்:
1. 17: கண்ணி.
3. 19: விதவை.
5. 21: பிணம்.
6. 22: சம்பு.
16. 40: உகண்டா.
18. 42: அருவம்.
31. 23: கரு.
33. 57: அபாயம்.
46. 38: கைதி
47. 63: நாத்து
53. 45: ஆழி
60. 52: வாடை


தொடர்ச்சி பக்: 21.

www.tamilarangam.net

# நாஜி எதிர்ப்பில் முன்மாதிரியான டெனிஸ் மக்கள்

கடந்த 24.09.94 டென்மார்க்கின் தென்பகுதியிலுள்ள KVAERS (கிவேர்ஸ்) கிராமத்தில் நாஜிகளால் ஸ்தாபிக்கப்பட்ட அச்சகம் ஒன்றிற்கு எதிரான ஊர்வலம் ஒன்றை அங்கு மக்கள் வெற்றிகரமாக நடாத்தியுள்ளனர். நாஜிகளின் அச்சகத்தின் மீது கற்கள், போத்தல்கள் எறிந்தும், டென்மார்க் தேசிய கீதம் பாடியும் வெறுப்பை வெளிக்காட்டினர். 250 மக்களுக்கும் அதிகமானோர் இதில் பங்கு கொண்டுள்ளனர். நாஜிகளுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட மோதலுக்குக் காரணம் நாஜிகளுக்கு எதிராக பொலீஸ் சரியான நடவடிக்கை எடுக்காததே காரணம் என பொதுமக்கள் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளனர்.

இக்கிராமம் பல ஆண்டுகளாக நாஜி எதிர்ப்பு ஊர்வலங்களுக்கு முக்கியமான இடமாக இருந்து வந்துள்ளது. ஏனெனில் ஜேர்மனிய நாஜியான THIES CHRISTOPHERSON, (76) நீண்டகாலம் தஞ்சம் புகுந்துள்ளான். இவன் ஜேர்மனிய அரசால் தேடப்பட்டு வருபவன். இவன் டென்மார்க்கிலிருந்து கொண்டே ஜேர்மனியில் தடைசெய்யப்பட்ட சஞ்சிகைகள், நூல்களை வெளியிட்டு வருபவன். முக்கியமாக நாஜிகளின் கொலைக் களமான AUSCHWITZ என்பது 'கொலைகளம் அல்ல' எழுதிவருவதுடன், அது ஒரு "விடுமுறையை கழிக்கும் இடம்" என்று கூறி வரலாற்றைப் புரட்டுபவன். அதற்கான நூல்களை வெளியிட்டு உலகம் முழுதும் பரப்புபவன். டென்மார்க்கிலுள்ள கருத்துரிமைச் சுதந்திரத்தை பாவித்து நாஜிகள் POST BOX, அச்சகங்கள் நிறுவி இனவாதத்தை வளர்ப்பதாக மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர். இக்கிராமத்தை முன்மாதிரியாக வைத்து ஏனைய கிராமங்கள், நகரங்களிலும் நாஜி எதிர்ப்பு ஊர்வலங்களை நடாத்த வேண்டும் எனவும் நாஜி எதிர்ப்பாளர்கள் கூறியுள்ளனர். இப்பிரச்சினை அரசியல் வாதிகளையும் பேச வைத்துவிட்டது.

டென்மார்க்கின் வலதுசாரிக் கட்சிகள் கூட தங்கள் அணிகளுக்கு நாஜி எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும்படி கூறவைத்துள்ளது. டென்மார்க் பாராளுமன்றத்திலும் நாஜிகளை தடைசெய்யும் சட்டம் விரைவில் அமுல்படுத்தவுள்ளனர்.



— THIES CHRISTOPERSON. —

www.tamilarangam.net



# பழையன கழிதல் காலத்தின் விதி!

தஸ்லிமா நஸ்ரீன் - பங்களாதேஷ் முல்லாக்களை நடுங்க வைக்கும் ஓர் எழுத்தாளர்; கவிஞர்; நாவலாசிரியர். அயோத்தி பிரச்சினையையொட்டி அவர் எழுதிய அவமானம் எனும் நூலுக்காக முஸ்லீம் மதவெறியர்களால் வேட்டையாடப்பட்டவர்.

அண்மையில் ஸ்டேட்ஸ்மேன் பத்திரிக்கையில் 'குர்ஆன் காலாவதியாகிவிட்டதாக' நஸ்ரீன் பேட்டி கொடுத்திருந்தார் என்று பிரச்சினை ஒன்று கிளம்பியது. தஸ்லிமா மறுப்பு ஒன்றை வெளியிட்டார். ''மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற குரான், வேதங்கள், பைபிள் போன்ற எல்லா மதநூல்களும் 'இடப் பொருத்தமில்லாதவை, காலப் பொருத்தமில்லாதவை' எந்த சமூக வரலாற்று நிலைமைகளில் அவை வெளியிடப்பட்டனவோ அந்த சந்தர்ப்பத்தை நாம் கடந்து விட்டோம். எனவே அந்தக் கருப்பொருள் நம்மை வழி நடத்தக் கூடாது. அவற்றை முழுவதும் திருத்த வேண்டுமா வேறு ஏதாவது செய்ய வேண்டுமா என்ற கேள்விக்கே இடமில்லை. நாம் முன்னேற வேண்டுமானால், பழைய நூல்களைக் கடந்து நாம் போக வேண்டும். நமது ஆன்மீகத் தேவைகளுக்கு நாம் மனித நேயத்தையே புதிய நம்பிக்கையாகக் கொள்வோம்.'' -இதுவே அவரது அறிக்கை.

இதை அடுத்து வங்காள தேச அரசு அவரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்தது. முஸ்லீம் மதவாதிகள் அவரது தலைக்கு விலை பேசியுள்ளார்கள். நாடெங்கும் மதவெறியர்களின் ஆர்ப்பாட்டம், ஊர்வலங்கள் நடக்கின்றன; தஸ்லிமாவின் வீடு அவரது தந்தையின் வீடுகளின் மேல் குண்டுகள் வீசப்படுகின்றன; அவர்கள் மீது அரசு எந்த வழக்கும் போடாமல் வேடிக்கை பார்க்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இஸ்லாம், பெண்களை நடத்தும் விதம் பற்றி ஒளிவு மறைவில்லாமல் தஸ்லிமா விமரிசிக்கிறார். "எங்களது மதம் (இஸ்லாம்) பெண்களுக்கு எவ்வித மனித மதிப்பையும் வழங்கவில்லை. பெண்களை அடிமைகளாக நடத்துகிறது. பெண்கள் ஆண்களின் விலா எலும்பிலிருந்துதான் உருவாக்கப்பட்டாள் என்று இஸ்லாம் கூறுகிறது. அதனால் தான் இஸ்லாத்தை' எதிர்த்து எழுதுகிறேன். பெண்கள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டுமானால், அவர்கள் மதங்களிலிருந்து வெளியேறி வாழ வேண்டும்" இவை ஆஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தஸ்லிமாவின் பதில்கள்.

இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த தஸ்லிமா பகுத்தறிவைக் கொண்டு அதை விமரிசிக்கிறார். இஸ்லாமியரல்லாதவர்கள் இஸ்லாமை விமரிசித்தால் 'அவர்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று சமாளிக்கும் முல்லாக்கள், இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்த தஸ்லிமா இஸ்லாம் மதத்தை விமரிசிக்கும் போது அவரை மிரட்டுகிறார்கள். முன்பு சால்மன் ரஷ்டி: இன்று தஸ்லிமா.

மத நம்பிக்கை இல்லாத நாம், மத நம்பிக்கை கொண்ட மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்த முனைவதில்லை. ஆனால் அறிவின் துணை கொண்டு தஸ்லிமா போன்றோர் விமரிசனம் செய்யும் போது, அதற்குப் பதிலளிக்கத் துப்பில்லாத கோழைகளான மதவெறியர்கள் விமரிசனம் செய்பவர்களை வேட்டையாடுகிறார்கள்.

ஆனால், தஸ்லிமா கேட்கிற கேள்விக்கு பதில் அளிக்கப்படாமலேயே இருக்கிறது. 'குரான் காலப்பொருத்தமில்லாதது', என்ற விமரிசனத்தை மறுத்து 'அது காலப் பொருத்தமுள்ளதுதான்' என்று வாதமும் ஆண்மை மதவெறியர்களுக்கு இல்லை.

இஸ்லாம் உள்ளிட்ட எந்த மதத்தின் வரலாறும் வெற்றி வரலாறு அல்ல; தோல்வியின் வரலாறுதான். 1200 ஆண்டுகளில் குரானுக்கு ஒரே ஒரு நிலையான வியாக்கியானம் இல்லை. எத்தனையோ குழுக்கள், எத்தனையோ விளக்கங்கள், எத்தனையோ நம்பிக்கைப் பிரிவுகள். இவை ஏன்? கரிஜைட்டுகள், மூர்ஜஜைட்டுகள், குதிரைட்டுகள், ஹன்பலைட்டுகள் என்று பல பிரிவுகள் ஏன்? பல வர்க்கங்கள், மற்றும் ஆதிக்கத்திலிருந்த நபர்களுக்கேற்ப இந்தப் பிரிவுகள் இருந்தன. எகிப்திய அறிஞர் டாக்டர் தாஹா ஹுசைன் குறிப்பிடுவதை வைத்துப் பார்த்தால் மக்காவின் குரைஷி இன மக்கள், மதீனாவுக்கு இடம் பெயர்ந்து சென்ற முஸ்லீம்களுக்கு உதவி புரிந்த அன்ஸார்கள், நாடோடி அராபியர்கள், வென்றடக்கப்பட்ட நாட்டு மக்கள் - என்று நான்கு குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் குரானுக்குச் சொன்ன விளக்கங்கள் வேறு வேறு தான்.

**முகம்மது நபி மறைந்த முப்பதே ஆண்டுகளுக்குள் முஸ்லீம் மன்னர்கள் உள்நாட்டுப் போரில் இறங்கினார்களே, கலீஃபாக்கள் சாராயத் தொட்டியில் மிதந்தார்களே! இஸ்லாமிய சட்டங்களைச் செல்லாததாக்கியவர்கள் யார்? தஸ்லிமா போன்றோரா? இஸ்லாமிய மன்னர்களா?**

முகம்மது நபி மறைந்த முப்பதே ஆண்டுகளுக்குள் முஸ்லீம் மன்னர்கள் உள்நாட்டுப் போரில் இறங்கினார்களே, கலீஃபாக்கள் சாராயத் தொட்டியில் மிதந்தார்களே! இஸ்லாமிய சட்டங்களைச் செல்லாததாக்கியவர்கள் யார்? தஸ்லிமா போன்றோரா? இஸ்லாமிய மன்னர்களா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கே இருக்கிறது 'தூய இஸ்லாமிய நெறி'? காஷ்மீர் முஸ்லீம்கள் சூஃபி வழிபாட்டைப் பின்பற்றுகிறார்கள். ஹிஸ்புல் முஜாகிதீன் குழு பர்தா போடாத காஷ்மீரி பெண்களை பர்தா போடச் சொல்லி மிரட்டுகிறது. முஸ்லீம்கள் நாகூர் தர்காவுக்குப் போவதுகூட இஸ்லாமிய சட்டத்துக்குப் புறம்பானதுதான். அவ்வளவு ஏன், பெண்கள் நாடாளக்கூடாது என்பதுதானே இஸ்லாமியக் கோட்பாடு? தஸ்லிமாவுக்கு எதிராகப் போராடுவதற்கு முன்னால் வங்க தேசத்தின் பெண் அதிபருக்கு எதிராகவல்லவா அவர்கள் போராட வேண்டும்?

இஸ்லாமிய தத்துவம், கோட்பாடு போன்ற மண்டைகனக்கும் விஷயம் கூட வேண்டாம். சாதாரண சகோதரத்துவ கோட்பாட்டின் படி பார்த்தாலும் சவுதி செய்வது சரியா? ஈவிரக்கமற்ற முறையில் ஈராக் மீது குண்டுமாரி பொழிந்தது அமெரிக்கா.

ஈராக்கிய (முஸ்லீம்) குழந்தைகளை வியாபாரத்தடை மூலம் இன்னும் பட்டினி போடுகிறது. அந்த அமெரிக்காவின் கூட்டாளியான சவூதி அரசு இஸ்லாமிய துரோகி இல்லையா? 'சாத்தான்' இல்லையா? ஹஜ் யாத்திரை சென்ற முஸ்லீம்கள் சவூதி ஷேக்குகள் மீதல்லவா கல்லெறிந்திருக்க வேண்டும்? இந்தியாவில் சதாம் உசேனுக்கு ஜிந்தாபாத் போட்டு என்ன பயன்?

முஸ்லீம்களை கொல்லும் செர்பியாவுக்கு ருமேனியா வழியாக எண்ணெய் விற்றுப் பணம் கொள்ளை அடிக்கிறது ஈரான். குர்ரானில் எத்தனையாவது குறாவில் எத்தனையாவது வசனத்தின் படி ஈரானின் நடத்தைக்கு அங்கீகாரம் இருக்கிறது?

யுகோஸ்லோவியா - சராஜெவோ முஸ்லீம்களுக்காக உலகெங்கிருந்தும் அனுப்பப்பட்ட 1747 விமான லோடுகள் உதவியில் மொத்த முஸ்லீம் உலகம் அனுப்பிய உதவி வெறும் 30 லோடுகள் மட்டுமே. இதுதான் இஸ்லாமியச் சகோதரத்துவமா? உலகளாவிய தரும நெறியா?

குரான் காலத்துக்கு ஒவ்வாதது என்று ஒருவர் விமரிசித்தால் காது கொடுத்து முல்லாக்கள் முதலில் கேட்கட்டும். குரான் காலத்தில் அடிமைத்தனம் இருந்தது; தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் கிடைக்கும் பெண்களை 'சட்டப்படி உரிமையாக்கிக் கொள்ள' (வசனம் 33:50) அனுமதி கொடுக்கிறது குரான். முஸ்லீம் பேரரசில் வெள்ளமெனப் பெருகிய அடிமைகள் பற்றி வரலாறு ஏராளமாகக் கூறுகிறது. மூஸா பின் நூஸைர், ஆப்பிரிக்காவிலிருந்து 3 லட்சம் அடிமைகளைப் பிடித்து வந்ததும், ஸ்பெயினில் காதிக் (GOTHIC) பிரபுக்கள் குடும்பங்களிலிருந்து 30,000 கன்னிப் பெண்களைக் கைப்பற்றியதும் வரலாறு. அடிமைகளைச் சட்டப்படி உரிமையாக்கிக் கொள்ள குரான் வழங்கும் அனுமதி இப்போது செல்லுமா? அதை அமல் படுத்தக் கோருவார்களா இந்த மதவெறியர்கள்? முகமது நபி காலத்திலேயே இருந்தாலும், அடிமைத்தனம் சகோதரபாசத்துக்கு நேர் எதிர் அல்லவா? இது ஒரு சோற்றுப்பதம்தான். இன்னும் எவ்வளவோ இருக்கிறது.

குரான் காலத்துக்கு ஒவ்வாதது என்று வரலாறு நிரூபித்து வருகிறது. அதை முஸ்லீம்களே நிரூபிக்கிறார்கள். ஆண் ஆதிக்கவாதிகளும் பணம் படைத்தவர்களும் மத முகமூடி போட்டு நாடகம் ஆடுகிறார்கள். விமரிசிப்பவர்களை எதிர்ப்பவர்களின் உண்மை முகம் இதுவே.

கலீஃபா உத்மான சொந்த உறவினர்களுக்கு அரசுக்கருவூலத்தில் கைவைத்து தாராளமாகச் செலவு செய்தார். ஆனால், இவருக்கு முன்னாலிருந்த கலீஃபா உமர் அப்படிச் செய்யவில்லை - அவர் கடுமையான ஒழுக்கவாதி. உத்மான் சொன்னாராம்; "உமர் இறை பயத்தினால் உறவினர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை; நான் இறை பயத்தினாலேயே உறவினர்களுக்குக் கொடுக்கிறேன்". குரானில் வரும் உறவினரைப் பாதுகாப்பது குறித்த 'ஸிலா-ஏ-ரஹ்மி' என்று பண்பை உத்மான் என்ன 'நயமாக'க் கையாண்டார் பார்த்தீர்களா? உமரும் குர்ஆனைக் காட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டினார்; உத்மனும் குரானைத்தான் காட்டுகிறார். குரானை எப்படி வளைக்கலாம் என்று முகமதுநபி மறைந்து 30 ஆண்டுகளிலேயே வளைத்துக் காட்டி வரலாறும் படைத்து விட்டார்கள் முஸ்லீம் ஆட்சியாளர்கள். வரலாற்றுக்குப் பதில் சொல்ல வக்கற்றவர்கள் தஸ்லிமாவைத் தூக்கில் போடத் துடிக்கிறார்கள்.

இந்தியாவில் ஷாபானு வழக்கில் நியாயமான ஜீவாம்சத்தை மறுத்து முல்லாக்களுக்கு வக்காலத்து வாங்கியது காங்கிரசு. இப்போது உத்தரப்பிரதேச சிவில் வழக்கொன்றில் நிலச் சொத்து விவிகாரத்தில் தொடங்கி, மும்முறை தலாக் கூறி (ORAL) விவகாரத்து செய்வது செல்லுபடியாகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. உடனே சீர்திருத்தம் பற்றிக் கூட சிந்திக்காமல் அவசர அவசரமாக ஷரீஅத் கோர்ட்டுகளை சட்ட ரீதியாகவே அங்கீகரித்து விட்டது காங்கிரசு அரசு.

ஷரீஅத் சட்டங்கள் குரானிலிருந்தும், நபிகள் வாழ்க்கை அனுபவமான சுன்னாவிலிருந்தும் தொகுக்கப்பட்டவை என்று சொல்லப்படுகின்றன. இவை காலகாலமாக மாறாது காக்கப்படும் புனிதச் சரக்கு அல்ல; இஸ்லாமிய ஆட்சி நடக்கும் நாடுகளில் எத்தனையோ முறை இவை மாற்றப்பட்டு விட்டன.



'தாஸ்லியாவுக்கு மரணதண்டனை வழங்கு! பங்களாதேஷ் மதவெறியர்கள் ஆர்ப்பாட்டம்

ஷரீஅத் கோர்ட் முல்லாக்களின், ஆண்-ஆதிக்க, ஆளும்வர்க்க நபர்களின் கரங்களில் ஓர் ஆயுதம். முஸ்லீம் அல்லாதவர்களுக்கு இதனால் முஸ்லீம் பெண்கள், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் தான் பாதிப்படைவார்கள்.

அவர்கள் மத்தியிலிருந்து தஸ்லிமா போன்ற கலகக் குரல்கள் உருவாகி விடக் கூடாதென்றுதான் வெறியர்கள் காட்டுக் கூச்சல் போடுகிறார்கள். கலகக்குரல்கள் இல்லாமல் ஜனநாயகம் பிறக்காது; மத வெறியர்களுக்கு வரலாற்றுப் பாடங்கள் உதவுவதில்லை.

எவ்வளவுதான் உயர்ந்த நோக்கத்துக்காக ஒரு மதம் உருவாகியிருந்தாலும், காலம் கடந்தது என்றால் அது காலம் கடந்தது தான்.

ஒட்டகம் அருமையான பயண ஊர்தி; ஆனால் இன்றைய அராபிய ஷேக்குகள் ஒட்டகத்தின்மேல் பயணம் செய்வதில்லையே!. டெல்லி நட்சத்திர ஓட்டல்களில் வந்து தங்கும் ஷேக்குகளின் அறைக்கதவை உடைத்து உள்ளே நுழைந்து பாருங்கள், அவர் கரங்களில் குரான் தவழ்வதில்லை.

நன்றி: புதியகலாச்சாரம்.

www.tamilarangam.net

# கடிதங்கள்

ஆசிரியர்
சஞ்சீவி.

அன்புடையீர்

சஞ்சீவி பற்றிய என் கருத்துக்களை அறிய விரும்பினீர்கள் என்ற எண்ணத்தினாலேயே ஒரு கடிதத்தில் சாந்தன் தங்கரூபன் கட்டுரைகளின் குறைபாடுகளையும் சுட்டி எழுதினேன். சாந்தன் தனது அகச்சார்பான முடிவுகளை அலங்கரிப்பதற்காகத் தகவல்களை பயன்படுத்துகின்றார். அத்தகவல்களில் முறைமையும் உண்மையும் குறைபாடானவை. இதைத் திரும்பத் திரும்ப எழுதி அவரது குறுக்கு விசாரணைக்கு விடை தருவதை விட நானே விரிவாக எழுதுவது அதிகம் பயனுள்ளது. துரதிஷ்டவசமாக அதற்கான அவகாசம் எனக்கு இல்லை. ஒரு சில குறிப்புக்களை மட்டும் எழுதுகிறேன்.

ரொஸாரியோ ஃபெர்ணான்டோ ஒரு தென்இந்திய வம்சாவழித் தமிழர். அவர் செங்கொடிச் சங்க முக்கியஸ்தர். கம்யூனிஸ்ட் கட்சியில் அவர் முக்கியஸ்தர் அல்ல.

கட்சி உடைவின்போது நான் கட்சியில் இருந்திருந்தால் அல்லவா எந்தப்பக்கம் என்ற பிரச்சனை எழும்? தயவு செய்து சஞ்சீவி இந்தமாதிரியான தனிநபர் விவகாரங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

சாந்தன் தனது அரைஜீரணமான ஆய்வுகட்கு அலங்காரம் செய்வதற்கு வசதியான தகவல்களைப் பெற ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இல்லை. எழுதுகிற விஷயங்களையும் பங்குபற்றுகிற விவாதங்களையும் அவற்றுக்கான களங்களையும் தெரியும் உரிமை எழுத்தாளனுடையதே தவிர வேறொருவருடையதுமல்ல.

மூன்றாமுலகக் கோட்பாடு 1968 செக் ஆக்கிரமிப்புடன் உருப்பெறத் தொடங்கியது. அன்று ரொமானியாவுடன் சீனா கண்ட நெருக்கம் மாஓவின் 'மிகநெருக்கமான போராட்டத் தோழரும்' வாரிசுமான லின் பியாஓ மாஓவைக் கொல்ல முயன்று விபத்தில் இறக்குமுன்னமே நடந்தது. சோவியத்யூனியனுடனான முரண்பாட்டின் விருத்தியே அணிசேரா ஏழை நாடுகளின் ஒற்றுமை

www.tamilarangam.net

மூலம் பெருவல்லரசுகளைப் பலவீனப்படுத்தலாம் என்ற நோக்கத்திற்கு காரணமாயிருந்தது. இது பாட்டாளியர்க்குப் புரட்சிக்குப் பிரதியீடல்ல. மாஓவின் முரண்பாடுகள் பற்றிய கோட்பாடு, ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் ஆகியவற்றினின்று இது எழுந்தது. கட்சியில் மாஓவின் அதிகாரம் இருந்த காலத்திலேயே சீனாவின் அயற்கொள்கையிலான பலமுக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன. இவை பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன என்று சாந்தன் அறியக் கூடும்.

இனியாவது செந்திவேல், இக்பால் போன்றோருடன் சாந்தன் தொடர்பு கொண்டு கட்சியின் வரலாற்றை ஒழுங்காக எழுதவா-மென நம்புகிறேன்.
முயற்சி பற்றித் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்:-

" தெய்வத்தாலாகா ...தெனினும் முயற்சி தன்
மெய்வருந்தக் கூலிதரும்."

சாந்தன் முயற்சி செய்து தகவல்களைத் திரட்டி அவற்றினின்று தொடங்கி முடிவுகட்டு வருவாராக.

1976 வரை சீனாவில் மாஓ அதிகாரத்தில் இருந்திராவிட்டால் டெங்கை 1976 பெப்ரவரியில் அவர் எப்படி நீக்கியிருக்க முடியும்? இன்று டெங் பற்றி விவாதத்தையும் 1976 வரையிலான சீன அரசியலையும் போட்டுக் குழப்பாமலே மூன்றாமுலகக் கோட்பாட்டின் விருத்தி பற்றி அறியலாம்.

செம்மஞ்சள் ஏடு = சிவப்புக் கொடியுயர்த்தும் அவதூற்றுப் பத்திரிகை
அரை உண்மை = அரைகுறைத் தகவல்களாற் சோடிக்கப்பட்ட பொய்.

இதற்கு மேல் இந்த விவாதத்தின் மூலம் பயனுள்ள ஏதும் விளை-யுமென நான் நம்பவில்லை.

றாக்கிங் பற்றிய கட்டுரைகள் வரவேற்கத்தக்கன.

அன்புடன்,
சிவசேகரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப்போட்டி

இல: 24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 | 3 | 4 | ■ | 6 | 7 | 8 |
| 9 | ■ | 11 | ■ | 13 க் | ■ | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 ண | ■ | 23 | ■ |
| 25 க | 26 | 27 | 28 | 29 | 30 | ■ | 32 |
| 33 | 34 | ■ | 36 க | 37 | 38 | 39 | ■ |
| ■ | 42 | 43 | 44 | 45 | ■ | 47 | 48 |
| 49 | ■ | ■ | 52 | 53 | 54 | ■ | 56 |
| 57 | 58 | 59 | ■ | 61 | 62 | ■ | 64 |

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

0128, No: 24

afs. ________________

________________

________________

________________

www.tamilarangam.net

# சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 uS |
| Canada<br>Australia | 29 uS |
| Sweden<br>Norway | 125kr. |
| Danmark | |

காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்

A/C.NO.7601-408876-9
CHANCHIVE
Vestjysk Bank
7500-Holstebro,
Danmark.

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

CHANCHIVE
Danmarksgade.10
7500 Holstebro
DANMARK

"மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

